# பரிசுத்த ஆவியும்
# பறபல பாஷையும



திருமறை அறிஞர்

Rev. Dr. A. கிறிஸ்டோபர் M.A., D.D.,




# பரிசுத்த ஆவியும் பற்பல பாஷையும்

ஆசிரியர்
திருமறை அறிஞர்
Rev. Dr.A. கிறிஸ்டோபர்

வெளியிடுபவர்
விண்ணக அப்பம்
2, நேருவீதி, சூரம்பட்டி,
ஈரோடு - 638 009.

RE - EDITION - April 2018
TOTAL COPIES - 1000
COPY RIGHT - TO AUTHOR
PRICE - Rs 40.00 (IN INDIA)
BOOK NUMBER - T 13

FOR DETAILS CONTACT
**WINNAGA APPAM**
NO.2, NEHRU STREET,
SURAMPATTI,
ERODE – 638 009. S.INDIA
PHONE/Fax : (0424) 2277286
e-mail : erodeipa@yahoo.com
website:www.erodeipa.org
Bank of India (Erode Branch)
A/c No : 820210100005638
A/c Name : C.Alex Dhinakaran



# அணிந்துரை

திருமறைப் பெரியார்
மறைதிரு. யோபு ஞானப் பிரகாசம்
இந்தியன் பெந்தகொஸ்தே அஸம்பிளீஸ்,
கோயம்புத்தூர் - 12.

ஆவிக்குரிய புத்தகங்களினால் கிறிஸ்தவ சமுதாயத்தில் புதியதொரு அசைவை உண்டாக்கிய பாஸ்டர் A.கிறிஸ்டோபர் அவர்களுக்காய் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். பல தரப்பட்ட ஆவிக்குரிய தேவையுள்ள மக்களின் உளவேட்கையைத் தணிக்கும் இவரது எழுத்துக்கள், இனிய தமிழில் எளிய நடையில் கொள்கைப் பிடிப்பில் உறுதியோடு அமைந்திருத்தல் பாரட்டுக்குரியது.

இவர் எங்கள் இ.பெ.அ. ஸ்தாபனத்தின் பெரியார் மாவட்ட மத்தியப் போதகராகவும், ஈரோடு திருச்சபையின் ஸ்தலப் போதகராகவும் இருந்து கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறார். எங்கள் ஸ்தாபனத்தின் பத்திரிக்கையான ''இந்தியா பெந்த கொஸ்தே நற்செய்தியில் தொடர்ந்து குடும்பங்களுக்கான செய்திகளை எழுதி வருகிறார்

இவரது முந்தின வெளியீடுகளாகிய வளமான பிரசங்கி, ஜெபம்பண்ண வேண்டிய விதமாவது, என் தாசனாகிய யோபு போன்ற புத்தகங்கள் பெரும் ஆசீர்வாதத்தை வாசகர்களுக்குக் கொண்டு வந்தது போல இவரின் புதிய படைப்புகள் பெரும் ஆசீர்வாதங்களை தேவ ஜனத்திற்குக் கொண்டு வர கர்த்தர் கிருபை செய்ய வேண்டும் என்று வாழ்த்துகிறேன். ஜெபிக்கிறேன்.

ஆமென்.

# என்னுரை

என் இனிய தமிழ்க் கிறிஸ்தவ வாசகர்களுக்கு இரட்சகர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். என் முந்தின நூல்கள் தங்கள் ஆத்துமாவிற்கும் ஆவிக்குரிய வாழ்விற்கும் ஆசீர்வாதமாய் அமைந்தது போல் உங்கள் கைகளிலிருக்கும் இந்தப் 'பரிசுத்த ஆவியும் பற்பல பாஷையும்' என்ற புத்தகம் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் ஊழியத்திற்கும் நல்உரமாய் இருக்குமென்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

பரித்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்து பல்வேறு விநோத வியாக்கியானங்கள் உலாவிவரும் விபரீதமான காலக் கட்டத்தில் வாழ்ந்து வரும் பரிசுத்தவான்கள் எல்லோருக்கும் சரியான தெளிவும், அறிவும், ஆவிக்குரிய அனுபவமும் பெற்றிடல் வேண்டும் என்ற பேரவாவில் இஃதினை எழுதுகிறேன்.

கொஞ்ச நாட்களாக பரிசுத்த ஆவியானவர் என் உள்ளத்தில் தந்த நெருடல்களின் எழுத்து வடிவமே இந்தப் புத்தகம். இவைகள், பரிசுத்த ஆவியானவர் பாங்காய் எனக்குப் போதித்தவைகள்; பங்காய் எனக்குத் தந்த அனுபவங்கள்.

இந்தப் புத்தகம் உங்கள் உள்ளத்திலும், உணர்விலும், உடலிலும், ஏன் ஊழியத்திலும் கூட உண்மையான மாற்றத்தைக் கொண்டுவரும் என்று உன்னதருக்குள் நம்புகிறேன்.

உற்றுப் படித்திடுக

உணர்ந்து படித்திடுக

உயர்வு பெற்றிடுக

அன்போடும், ஜெபத்தோடும்
அவர் சேவையில்

**அ. கிறிஸ்டோபர்**



# படைக்கிறேன்

பரிசுத்தமுடன் உம்மை சந்திக்க
பரிசுத்த ஆவி ஈந்தவரே
நவமான மொழியில் துதிக்க
நன்மையதை தந்தவரே ஸ்தோத்திரம்

சத்தியத்தில் பெலன் பெற்றிட
சத்திய ஆவி தந்தவரே
உலகத்தின் எல்லைவரை சென்றிட
உம்பெலன் தருபவரே ஸ்தோத்திரம்

உம்வருகை நாளில் சந்திக்க
உம்ஜனத்தை ஆவியால் நிரப்பிடும்
உதவியாக்கும் இந்நூலை எனவேண்டி
உம்பாதம் படைக்கிறேன் ஏற்றிடுவீர்

இவண்
**அ. கிறிஸ்டோபர்**

# உள்ளடக்கம்

1 .பரிசுத்த ஆவி  -  ஓர் அறிமுகம்

2.பரிசுத்த ஆவி எதற்கு?

3.அந்நியபாஷை அவசியமா? ஆதாரமுண்டா?

4.அந்நியபாஷையினால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்

5.ஆவிக்குரிய வரங்கள்

6.பரிசுத்த ஆவியைப் பெறுவது எப்படி ?





# 1

## பரிசுத்த ஆவி - ஓர் அறிமுகம்

என் இனிய வாசகர்களுக்கு அன்பு வாழ்த்துக்கள். எந்நாளும் உங்களோடு இருக்கும்படிக்கு வேறொரு தேற்றரவாளனை உங்களுக்கு அனுப்புகிறேன் என்று மொழிந்த நமது அருமை இரட்சகரின் சொற்படியே, பெந்தெகொஸ்தே நாளில் பிதாவானவர் தமது வாக்குத்தத்தத்தின்படியே பொழிந்த பரிசுத்த ஆவியைக் குறித்து எழுதப்பட்ட இந்தப் புத்தகம் உங்கள் கரங்களில் தவழ்வது மிகப்பெரிய ஆசீர்வாதமே.

பரிசுத்த ஆவியானவரைக் குறித்து பல்வேறு கருத்து வேற்றுமைகள் ஆங்காங்கு கரைபுரண்டு ஓடுகின்ற இந்த நாட்களில் கறைதிறையற்ற பரிசுத்தக் கூட்டமாய் நீங்கள் அவருக்கு முன்பாக நிற்க வேண்டுமென்ற உந்துதலின் பேரில் இந்தப் புத்தகத்தை எழுதுகிறேன்.

இந்தப் பரிசுத்த ஆவியைக் குறித்து தான் எத்தனை விதமான கேள்விகள் ! எத்தனை விதமான அபிப்பிராயங்கள் ! அப்பப்பா ! அவைகளுக்கு பதில் சொல்வதென்றால் இந்தப் புத்தகம் முற்றுப் பெற முடியாதென்பதை அறிந்திருக்கிறேன்.

‘எனினும் பரிசுத்த ஆவியைக் குறித்த தெளிவான சத்தியத்தை வேத வசனங்களோடு விளக்கி உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்’ அநேக நாட்களுக்கு முன்பு எங்கள் பட்டணத்தில் பரிசுத்த ஆவியால் இட்டிலி வேகுமா?

என்று பரிகாசமான கேள்வியை பார்க்குமிடமெல்லாம் எழுதி வைத்திருந்தார்கள்.

புற மதத்தினர் பரிசுத்த ஆவி என்பது ஏதோ ஒரு சக்தி அல்லது வாயு என்று எண்ணுவது போலவே கிறிஸ்தவத்துக் குள் பலர் இப்படி நம்புவதோடல்லாமல் ஆவியின் கிரியை களை பகுத்தறிய முடியாமல் இது பிசாசின் கிரியை என்று சொல்லி தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கிறார்கள்.

எட்டி எட்டிப் பார்த்தும் திராட்சைக் குலை கிட்டாது போனதினால் சீ சீ இது புளிக்கும் என்று நரி நக்கலாக சொன்னது போலவே இந்த ஆவியின் அனுபவங்களை அடைய முடியாமற் போன சிலர் அப்பப்பா இது அசுத்த ஆவியின் கிரியை என்று அலட்டிக் கொள்கிறார்கள்.

இந்தக் கடைசிக் காலத்தில் நீங்கள் பரிசுத்த ஆவியைக் குறித்து தெளிவாக அறிந்து கொள்வதோடல்லாமல் பரிசுத்த ஆவியின் அனுபவங்களுக்கு விரோதமாய் எழுப்பப்படுகிற அக்கினியாஸ்திரங்களை அணைப்பதற்கு அனுபவமும் அறிவும் பெற்றிருத்தல் வேண்டும். அந்த வகையில் இந்தப் புத்தகம் ஆவியானவரின் ஒத்தாசையோடு நல் ஆசானாய் உங்களுக்கு அமையுமென்று எண்ணுகிறேன்.

பரிசுத்த ஆவி என்பது சக்தியல்ல. பரிசுத்த ஆவி என்று சொல்வது ஒரு விதத்தில் குறைவான வார்த்தை என்பதை முதலில் உணரவேண்டும். பரிசுத்த ஆவியானவர் என்பதே சரியானதும் சாலச் சிறந்ததுமாகும்.

இயேசு கிறிஸ்து தமது சீஷர்களோடு பரிசுத்த ஆவியைக் குறித்து சொன்ன போதெல்லாம் ஆவியாகிய தேற்றரவாளன் (யோவான் 14:16) என்றும் சத்திய ஆவியானவர் (யோவா 14:17) என்றும் கூறியிருப்பதுடன் பரிசுத்த ஆவியைப் பற்றி பேசும் போதெல்லாம் ஆவி என்று சொல்லாமல் அவர் என்று இயேசு சொல்லியிருப்பது மிக முக்கியம்.



மனிதனை ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற அம்சங்கள் பூரணப்படுத்துவது போலவே தேவனுடைய தத்துவத்தில் பிதா - குமாரன் - பரிசுத்த ஆவி என்ற மூன்று தத்துவத்தின்படி உண்டு. பிதா குமாரனாகிய கிறிஸ்துவை இந்தப் பூவுலகிற்கு அனுப்பினார். உயிர்த்தெழுந்த கிறிஸ்து பிதாவின் சமூகத்திற்கு சென்று பரிசுத்த ஆவியானவரை இந்தப் பூவுலகிற்கு அனுப்பினார்.

இந்த தெய்வீகத் திரித்துவத்தை புரிந்து கொள்ளக் கூடாதவர்களும் மறுதலிப்பவர்களும் பரிசுத்த ஆவியைக் குறித்த அறிவு இல்லாதிருப்பது இயற்கையே. எனினும் கல்விமான்களுக்கும் ஞானிகளுக்கும் வெளிப்படுத்தாத அரிய சத்தியங்களை - அனுபவங்களை பேதைகளுக்கும் அவர்தம் சபைக்கும் வெளிப்படுத்தியுள்ளார்.

வேதாகமத்தின் முதல் புத்தகம் முதல் அதிகாரத்தை திறந்து வாசித்துப் பாருங்கள் ''தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்'' (ஆதியாகம் 1:2) என்று எழுதப்பட்டுள்ளது. அதைப் போலவே வேதாகமத்தின் கடைசிப் புத்தகம் கடைசி அதிகாரத்தில் (வெளி 22:17) ''ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்'' என்று எழுதப்பட்டுள்ளது, இஃது எத்தனை ஆச்சரியம் பார்த்தீர்கள் !

ஆம் உலகத்தின் தோற்றம் முதல் இந்த யுகத்தின் முடிவு வரை சகலத்தையும் ஆள்பவர் பரிசுத்த ஆவியானவரே. எனவே பரிசுத்த ஆவியானவரைக் குறித்து சரியாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

வேதத்தில் மூன்று விதமான அனுபவங்கள் எழுதப் பட்டுள்ளது. 1. ஆவியானவர் இறங்கினார். 2. ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். 3. ஆவியினால் நிரப்பப் பட்டார்கள் என்ற ஆவியானவரின் வெவ்வெறு விதமான ஈடுபாடுகளை இவைகள் குறிக்கிறது.

பழைய ஏற்பாட்டைத் தொடர்ச்சியாக வாசித்தால் ஒரு காரியத்தை உங்களால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். தீர்க்கதரிசிகள், இராஜாக்களில் சிலர், நியாயாதிபதிகள் போன்றோர் மீது கர்த்தருடைய ஆவி இறங்கினபோது அவர்கள் அக்கணமே அசாதாரணமான மனுஷர்கள் போல் மாறி தீர்க்கதரிசனங்கள் உரைத்தார்கள். அற்புதங்கள் செய்தார்கள். இது ஆவியானவர் இறங்குகிற அனுபவம்.

இதில் ஒரு மனிதனைக் கொண்டு தமது கிரியையை வெளிப்படுத்த தேவ ஆவியானவர் இறங்கி வருவதாகும். அந்தக் காரியம் நிறைவேறின பின்பு அவர் அவர்களை விட்டு விலகிவிடுவார். அவர்கள் வழக்கம் போல் சாதாரண மனிதர்களைப் போல் மாறிவிடுவார்கள். மீண்டும் தேவைப்படும் போது ஆவியானவர் இறங்குவார்.

பழைய ஏற்பாட்டில் மானிடர் மேல் ஆவியானவர் இறங்கினது போலவே இன்றளவும் மனிதர் மேல் ஆவியானவர் இறங்கி வருகிறார். அவர் வந்து நமக்குள் கிரியை செய்து பாவ உணர்வை உண்டாக்கி கிறிஸ்துவுக்குள் நம்மை நடத்துகிறார். அதனால்தான் நாம் பாவ உணர்வடைகிறோம் - மனந்திரும்பு கிறோம் - இரட்சிக்கப்படுகிறோம்.

பரிசுத்த ஆவியானவரின் கிரியையினால் ஒரு மனிதன் இரட்சிக்கப்படுவது உண்மையென்றாலும் அவன் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை அடைந்துவிட்டான் என்று சொல்ல முடியாது.

இந்த இடத்தில்தான் சிலர் தவறிவிடுகிறார்கள். நான் இரட்சிக்கப்பட்டதே பரிசுத்த ஆவியால்தான். எனவே எனக்குள் ஆவியின் அபிஷேகம் உள்ளது என்று சுயதிருப்தி கொண்டு விடுகிறார்கள்.

நமக்கு சிறந்த வழிகாட்டி அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம். அதனைத் திறந்த மனதுடன் வாசித்தால் நம்மால் சிறந்த விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.



அப்போஸ்தலர் நடபடிகள் 19ஆம் அதிகாரம் 2ஆம் வசனத்தில் பவுல் எபேசுவிலுள்ள சீஷர்களைப் பார்த்து, நீங்கள் விசுவாசிகளானபோது அபிஷேகத்தைப் பெற்றீர்களா?'' என்று கேட்கிறார். அவர்கள் இல்லையென்று சொன்னதினால் பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்து ஜெபித்தார் (வசனம் 6) அவர்கள் அபிஷேகத்தைப் பெற்றார்கள்.

இதைப் போன்ற மற்றொரு குறிப்பை அப்போஸ்தலர் 8:14 முதல் 17 வரை உள்ள வசனங்களில் வாசிக்கலாம். பிலிப்புவின் ஊழியத்தால் பெரிய எழுப்புதல் சமாரியாவில் உண்டாகிறது. மக்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். செய்தி கேட்டு பேதுருவும் யோவானும் அங்கு செல்கிறார்கள். அவர்களுக்கு ஆச்சர்யம். காரணம் ஒருவரும் அபிஷேகத்தைப் பெறவில்லை. எனவே பேதுருவும் யோவானும் அவர்கள் மேல் கைகளை வைத்து ஜெபிக்க, அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றார்கள்.

மேலே கண்ட ஆதாரங்கள் அல்லது அனுபவங்கள் மூலம் நீங்கள் சரியான முடிவுக்கு வந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். பரிசுத்த ஆவியின் ஒத்தாசையால் கிறிஸ்தவ விசுவாசியாக மாறுவது வேறு, கிறிஸ்துவின் ஈவாக பரிசுத்த ஆவியைப் பெறுவது வேறு என்று விளங்குகிறதல்லவா ?

இங்கு இன்னுமொரு காரியத்தைக் குறித்து நான் விளக்கியே ஆக வேண்டும். சிலர் ஞானஸ்நானம் பெறும்போதே பரிசுத்த ஆவி நமக்குள் வந்துவிடுகிறது என்று எண்ணுகின்றனர். சிலர் போதிக்கவும் செய்கின்றனர். அப்படிப்பட்ட போதகத்திற்கு சாதகமாக இயேசு ஞானஸ்நானம் பெற்ற பொழுது பரிசுத்த ஆவி இறங்கினதை மேற்கோள் காட்டுகின்றனர்.

ஆனால் அப்போஸ்தலர் நடபடிகளை சரியாக இப்படிப் பட்டவர்கள் கவனிப்பதில்லை. சமாரியாவில், எபேசுவில் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள் கால இடைவெளிக்குப் பின்னரே அபிஷேகம் பெற்றனர். இதைவிட சிறப்பு

என்னவென்றால் (அப்போஸ்தலர் 10:47) கொர்நேலியு வீட்டார் பிரசங்கத்தைக் கேட்கும் போதே பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றனர். அதன் பின் பேதுருவின் ஆலோசனையின்படி ஞானஸ்நானம் பெற்றனர். எனவே பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வந்து கிறிஸ்துவுக்குள், இரட்சிப்பிற்குள், ஞானஸ்நானத்திற்குள் நடத்தலாம். அது வேறு அனுபவம். இது ஆவியானவரின் கிரியை எனப்படும். இதைவிட மேலான அனுபவமே பரிசுத்த ஆவியின் அபிஷேகம்.

ஒரு மனிதனுக்குள் என்றைக்கும் தங்கியிருக்கும்படி அவன் உள்ளத்தில் வாசம்பண்ண தேவ ஆவியானவர் முதல் முதலாக முழுவல்லமையோடு அவன் மேல் இறங்கி வருதல் அபிஷேகம் எனப்படும். அதாவது ஒரு மனிதன் முதல் முதலில் பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொள்வது அபிஷேகம் பண்ணப்படுதல் எனப்படும்.

அடுத்து நீங்கள் அப்போஸ்தலர் நடபடிகளை வாசித்துக் கொண்டே வந்தால் மீண்டும் மீண்டும் அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள் என்ற வார்த்தையைக் காண முடியும். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற விசுவாசிகள், தமது ஊழியத்தினை வல்லமையோடு செய்ய ஆவியானவரின் வல்லமை ஊற்றப்படுவதே நிரப்பப்படுதல் எனப்படும்.

ஒரு கிரியை நடப்பிக்க மாத்திரம் மனிதனுக்குள் ஆவியானவர் வந்தால் அது இறங்குதல். அவனுக்குள் என்றைக்கும் வாசம்பண்ணும்படி ஆவியானவர் முதன்முதலில் வருவது அபிஷேகம் பண்ணப்படுதல். அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் வல்லமையான ஊழியம் செய்ய தேவன் பரிசுத்த ஆவியின் வல்லமையால் நிரப்புவது நிரப்பப்படுதல்.

இங்கு மேன்மையான ஒரு காரியத்தை உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பழைய ஏற்பாட்டில் மிக சொற்பமானவர்கள் மீது மாத்திரம் தேவ ஆவியானவர் இறங்கினாலும் பிதாவினுடைய உயர்வான வாக்குத்தத்தம்



நமக்கு உண்டு, ‘‘.......நான் மாம்சமான யாவர்மீதும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்வார்கள்’’ (யோவேல் 2:20).

ஆம் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்பது ஏதோ பெந்தெகொஸ்தேகாரர்களின் கண்டுபிடிப்பல்ல. நமது தேவன் மாம்சமான யாவர் மீதும் (உங்களையும் சேர்த்துதான்) ஊற்றுவேன் என்று வாக்குச் செய்துள்ளார்.

இவ்வளவு மேன்மையான வாக்குத்தத்தத்தை சிலரால் ஜீரணிக்க முடியாததினால் இது நமக்கல்ல. இஸ்ரவேல் வம்சத்தாருக்குரியது என்று திசை திருப்பிவிடுவது வேதனைக்குள்ளானதே.

பரிசுத்த ஆவியைப் பொறுத்தவரையில் போதுமான விளக்கம் மற்றும் ஆதாரங்கள் அப்போஸ்தலர் நடபடிகளில் உண்டு. எனவே இந்த வாக்குத்தத்தத்தைக் குறித்து அப்போஸ்தலர்களின் கருத்து, போதனை என்ன என்பதைக் கவனிக்க வேண்டும்.

முதன்முறையாக பரிசுத்த ஆவியின் அபிஷேகம் திருச்சபையின் மேல் ஊற்றப்பட்டபோது, கண்டவர்கள் ஏதுமறியாது திகைத்து நின்றனர். அவர்கள் திகைப்பைப் போக்க, அப்போஸ்தலனாகிய பேதுரு, ‘‘தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டது படியே இது நடந்தேறுகிறது’’ (அப்போஸ்தலர் 2:16) என்று சொன்ன பதிலை யோசித்துப் பாருங்கள்.

எனவே திருச்சபையின் மேல் ஊற்றப்பட்ட பரிசுத்த ஆவியானது பிதாவாகிய தேவன், யோவேல் தீர்க்கதரிசியைக் கொண்டு சொன்ன தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலே.

இந்தப் வாக்குத்தத்தம் யூதருக்கு மாத்திரமல்ல, ‘‘வாக்குத்தத்தமானது உங்களுக்கும் (யூதருக்கும்) உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது’’ (அப் 2:39) என்று பேதுரு சொன்னதிலிருந்து பரிசுத்த ஆவியின் அபிஷேகம் யூதர்களுக்கு மாத்திரமல்ல. மாம்சமான யாவர்க்கும்

(கர்த்தர் தூரத்திலிருந்து வரவழைக்கும் யாவருக்கும்) என்று விளங்குகிறதல்லவா.

நமது நல் மாதிரியான இயேசுகிறிஸ்துவானவர் பரிசுத்த ஆவியினால் கன்னிகையிடத்தில் உற்பத்தியானாலும் ஞானஸ் நானம் பெற்றுக் கரையேறியவுடன் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டார். இந்த அனுபவங்களோடு இயேசு பரலோக ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கம் செய்த போது சொன்னவைகளை கவனித்தப்பாருங்கள்.

ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டானென்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன்.

அதாவது பரலோக இராஜ்யத்திற்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு மறுபடியும் பிறந்த ஒவ்வொருவரும் ஆவியினால் பிறக்க வேண்டியது அவசியம் என்று ஆண்டவர் மொழிந்தார். இந்த ஆவியின் அனுபவத்தைக் குறித்து யோவான் ஸ்நானன் சொல்லும்போது மத்தேயு 3:11 இல் நான் இப்பொழுது உங்களுக்கு ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன். எனக்குப் பின் வருகிறவர் அக்கினியினாலும் ஆவியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று சொல்லியுள்ளார்.

இயேசு பரமேறி செல்லும் முன்பும் மிகவும் வலியுறுத்தி பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்து சொல்லியுள்ளார். ‘‘நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்’’ (அப் 1:5) என்றார்.

அந்த வார்த்தையின்படியே ஆதி சபையும், அப்போஸ் தலரும் காத்திருந்து பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று வாழ்ந்தார்கள். ஊழியம் செய்தார்கள்.

அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்யுங்கள் (யோவான் 2:5)



# 2

## பரிசுத்த ஆவி எதற்கு ?

என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரை எருசலேம் நகரத்தில் இருங்கள் (லூக்கா 24:49).

இயேசு பரமேறிச் செல்லுமுன் தமது சீஷர்களுக்குக் கொடுத்த மிக முக்கியமான கட்டளையைக் கவனித்துப் பாருங்கள் ! எத்துனை சிறப்பு வாய்ந்தது என்று உணருவீர்கள். உலகம் முழுவதும் சுவிசேஷத்தை அறிவிக்கப் புறப்பட்டுப் போங்கள்; என்றவர் உன்னத பெலன் உங்கள்மேல் வரும் வரை தரித்திருங்கள் என்றது முக்கியத்தும் வாய்ந்த ஒன்று.

ஒரு பிரசங்கியார் ஒரு தேவாலயத்தில் கொடுத்த செய்தியை ஒலி நாடாவில் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. பரிசுத்த ஆவியைக் குறித்து அவர் சொன்ன வார்த்தைகள் எனக்கு வியப்பாக இருந்தது இரட்சிப்பும் கிறிஸ்தவ ஜீவியமும் நமது வாழ்வில் S.S.L.C. படிப்பைப் போன்றது என்றால் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் P.U.C. போன்றது. எனவே P.U.C. போகாவிட்டால் நட்டமில்லை. ஆனால் அது ஒரு கூடுதல் அனுபவம் அதையும் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார்.

இதைக் கேட்டபோது எனது உள்ளம் மிகுந்த வேதனைப் பட்டது. இரட்சிப்பு ***S.S.L.C***. யும் அல்ல. அபிஷேகம் ***P.U.C.***யும்

அல்ல, அந்நிய பாஷை B.Sc யும் அல்ல. இப்படிப்பட்ட மூளை அறிவிலிருந்து பிறக்கும் விளக்கங்களுக்கும் வியாக்கியானங் களுக்கும் விலகியிருக்க கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வாராக.

அப்படியானால் இந்தப் பரிசுத்த ஆவியானவரின் வருகையைக் குறித்த சிறப்பான நோக்கம் என்ன என்பதை நாம் உணர்தல் வேண்டும். உன்னதத்திலிருக்கிற ஆவியானவர் மிகப்பெரிய உன்னத நோக்கத்துடனேதான் நமக்குள் வாசம்பண்ண விரும்புகிறார் என்பதை முதற்கண் நாம் அறிதல் வேண்டும்.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் மாம்சத்திலிருந்த காலத்தில் ஒரு குறுகிய வட்டத்தில், குறுகிய காலம் மாத்திரமே மக்களோடு இருந்தார். ஆனால் அவரின் இரத்தத்தால் மீட்கப்பட்ட ஜனத்தை அவர்தம் வருகை வரை உடனிருந்து தேற்ற வேண்டிய அவசியம் அவருக்கு இருந்தது.

எனவே இயேசு ‘‘நான் பிதாவை வேண்டிக் கொள்வேன் அப்பொழுது என்றைக்கும் உங்களோடு கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனைத் தந்தருள்வார்’’. (யோவான் 14:16) என்றார்.

ஆம் பெந்தெகொஸ்தே நாளில் இறங்கிய பரிசுத்த ஆவியானவர் என்றைக்கும் நம்முடன் - திருச்சபையுடன் தங்கியிருக்கும்படி இந்தப் பூவிலேதான் இருக்கிறார். அது எவ்வளவு நாள் தெரியுமா. வெளிப்படுத்தல் 22:17 இல் ‘‘ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்’’ என்று எழுதியிருக்கிறபடி மணவாட்டி எடுத்துக் கொள்ளப்படும் வரை அவர் பூவில் நிலையாய் இருப்பார்.

தேவனுடைய எல்லையில்லா அன்பைப் பார்த்தீர்களா! நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை என்ற ஆண்டவர் அந்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற



நம்முடன் இருக்கும்படி தமது தூய ஆவியானவரையே நமக்கு அருளியுள்ளார்.

பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவோடு இருந்தார். அதனால் அவர் சகலத்திலும் ஜெயம் பெற்றார். எனவே ஒவ்வொரு விசுவாசியும் சகலத்திலும் கிறிஸ்துவைப் போல் மாறவேண்டுமென்றால் கிறிஸ்து பரிசுத்த ஆவியால் நிரப்பப் பட்டது போல் நாமும் நிரப்பப்பட வேண்டும்.

<u>கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகள் ஒரு மனிதனை பாவ மன்னிப்புக்குள்ளாக்கி தேவனுடைய மனிதனாக்குகிறது. அதே சமயம் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள் அந்த தேவனுடைய மனுஷனை பாவத்தின் மேல் ஜெயங் கொள்ள வைத்து அவனைத் தேவ சாயலாக்குகிறது.</u>

எனவே கிறிஸ்து ஒருவனுக்கு புதுவாழ்வைத் துவங்கி வைக்கிறாரெனில் ஆவியானவர் அந்த வாழ்வை பூரணப் படுத்துகிறாரென்பது மிகச் சரியான உண்மை எனவே கிறிஸ்துவுக்குள் பிறந்தவர்கள் எப்படியாகிலும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அந்த அபிஷேகம் நம்மை எல்லையில்லா ஆசீர்வாதங் களுக்குள் நடத்தும்.

இங்கே உங்கள் உள்ளத்திற்கு உந்துதல் கொடுக்க பரிசுத்த ஆவியின் அபிஷேகம் எந்த விதத்தில் நமக்கு அவசியம் என்பதை 5 குறிப்புகளாக விளக்க விரும்புகிறேன்.

<u>1. வசனத்தின்படி வாழ்வு செய்ய பரிசுத்த ஆவி தேவை</u>

இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியைக் குறித்து தமது சீஷர்களுக்கு அறிமுகம் செய்யும்போது ‘‘சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; .....வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்’’ (யோவான் 16:13) என்ற சொல்லியுள்ளார்.

பரிசுத்த ஆவியானவரை இயேசு சத்திய ஆவி என்று குறிப்பிட்டிருப்பதைக் கவனியுங்கள். அந்த சத்திய ஆவியானவர் அரைகுறை அனுபவங்களுக்குள் அல்ல. சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துகிறார். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று ஆவியின் நிறைவைப் பெற்றிருக்கும் விசுவாசிகளுக்கு வசனத்தின் மேல் குழப்பம் இருக்காது, உபதேசத்தில் தடுமாற்றம் இருக்காது, பரிசுத்த ஜீவியத்தில் தொடர்ச்சியான தோல்வி இருக்காது ; இருக்கவே இருக்காது.

சத்திய ஆவி ஒரு மனிதனைப் போதித்து நடத்துவது மிக அலாதியானது. மனிதனைப் போல் முகத்தில் குத்துகிறவரல்ல அல்லது ஒரு சிலரைப் போல் குற்றப்படுத்தி ஒதுங்கிக் கொள்கிறவரல்ல. அவரின் போதகத்திற்கு முப்பரிமாணம் உண்டு. விளக்கம் வேண்டுமாயின் யோவான் 16:8 ஐ வாசித்துப் பாருங்கள்.

''அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும் நியாயத் தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்''

இந்த வசனத்தின்படி இந்த உலகத்தை (மக்களை, சபையை) பாவத்தைக் குறித்து உணர்த்திக் கண்டிப்பார். இரண்டாவது பாவத்திற்குத் தப்பும் நீதியின் வழியைத் தெரிவித்துக் கண்டிப்பார். மூன்றாவது, கீழ்ப்படியாமல் போனால் வரும் நியாயத்தீர்ப்பைக் குறித்து கண்டிப்பார்.

இப்பேர்ப்பட்ட பரிசுத்த ஆவியானவரைத் தனக்குள் கொண்டிருக்கும் மனிதன் திசைகெட்டுப் போவதில்லை.

அவர் நம்மைக் கண்டித்து உணர்த்துகிறவர் மாத்திரமல்ல நமது ஆன்மீக வாழ்வில் சோர்ந்து போகிற போது நம்மைத் தேற்றுகிறவர். சத்திய ஆவியாகிய தேற்றவாளன் என்று இயேசு சொன்னது எவ்வளவு பெரிய உண்மை தெரியுமா!



ஒரு தாய் தன் பிள்ளையை மார்போடு அரவணைத்துத் தேற்றுவது போலும் உற்சாகமூட்டும் வார்த்தைகளை சொல்லி அவனைப் பெலப்படுத்துவது போலும் பரிசுத்த ஆவியானவர் நமது உள்ளத்திற்குள்ளிருந்து நம்மை உற்சாகப்படுத்துகிறார்.

அநேக சமயங்களில் இந்த சுகத்தை நான் அனுபவித் துள்ளேன். எதிர்பாராத இடத்திலிருந்து எதிர்பாராத வேளையில் எதிர்பாராத அம்புகள், வம்புகள் என்னை வதைத்த நேரங்கள் உண்டு. மனமுடைந்து வாழ்க்கை கசந்து நகோமியைப்போல், ''நான் நகோமியல்ல, என் வாழ்க்கை கசந்துவிட்டது நான் மாராள்'' என்று புலம்பியதுண்டு''.

மனிதர்களால் தேற்றமுடியாத சூழ்நிலையில் ஜெபிக்ககூட பெலனில்லாத வேளைகளில் இந்தத் தேற்றரவாளன் செய்த தேறுதல்கள் சொல்லி விவரிக்க முடியாது.

அன்றைக்கு இயேசு எம்மாவூருக்கு போய்க்கொண்டிருந்த சீஷர்களுக்கு வசனத்தை விளக்கிக்காட்டிய பொழுது அவர்கள் உள்ளம் கொழுந்துவிட்டு எரிந்தது அல்லவா, அப்படியே நாம் நினையாத வேத பகுதிகளிலிருந்து நாம் அறிந்திராத சத்தியங்களை எடுத்துக்காட்டி நம்மை அப்படியே சொக்க வைத்து விசுவாசத்தில் நிற்க வைத்து விடுகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் தனக்குள்ள பலவீனத்திற்காக மூன்றுமுறை ஜெபித்த போது (II கொரி 12:9) என் கிருபை உனக்குப் போதும் என்று தேற்றினவர் நம் ஒவ்வொருவருடைய பரிதபிப்பிலும் பட்சமாக தேற்றி நம்மைப் பலப்படுத்தி சத்தியப்பாதையில் நடக்கச் செய்கிறார்.

<u>2. வல்லமையான சாட்சியாக வாழ பரிசுத்த ஆவி தேவை.</u>

இயேசுகிறிஸ்து உயிரோடு பூமியிலிருந்த வேளையில் (யோவான் 15:26, 27) நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய

''சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் வரும்போது அவர் என்னைக் குறித்து சாட்சி கொடுப்பார். நீங்களும்... எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.

உயிர்த்தெழுந்த பின்னரோ இந்த வசனத்திற்கு ஒரு புதிய விதமான இணைப்பைக் கொடுத்தார். ஆவியானவர் சாட்சி கொடுப்பார், நீங்களும் சாட்சி கொடுப்பீர்கள் என்று பிரித்துச் சொன்னவர் அப்போஸ்தலர் 1:8ல் பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து..... எனக்குச் சாட்சிகளா யிருப்பீர்கள் என்று சொன்னது கவனிக்க வேண்டிய ஒன்று.

ஆம் தனியாக ஒரு மனிதன் சாட்சியிட முடியாது. அதற்கு விசேஷமான பெலன் தேவை. அந்த பெலனை பரிசுத்த ஆவியானவரே நமக்கு அருளுகிறார். நாம் கிறிஸ்துவுக் குள்ளிருந்து உலகத்தில் சாட்சியாய் வாழ தேவையான பெலனை பரிசுத்த ஆவியானவர் ஒருவரால் மாத்திரமே அருள முடியும்.

ஆவியின் அபிஷேகத்தைப் பெறாத நபர் சோதனை வேதனை இவைகளின் மத்தியில் சாட்சியாய் நிற்பது கூடாத காரியம். வெறும் வைராக்கியம் இருக்கும் பெலன் இருக்காது தோல்வியே மிஞ்சும்.

இதற்கு சரியான எடுத்துக்காட்டு அப்போஸ்தலனாகிய பேதுரு; அவரது ஊழியத்திற்கு இரண்டு பகுதி உண்டு. 1.பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு முன்பு செய்த ஊழியம் 2.பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றபின் அவர் செய்த ஊழியம்.

பரிசுத்த ஆவியைப்பெறும்முன் இயேசுவின்மேல் அவருக்கு அன்பு இருந்தது. வைராக்கியம் இருந்தது. யார் மறுதலித்தாலும் நான் மறுதலிக்க மாட்டேன் என்றார். ஆனால் நியாயம் விசாரிக்க இயேசு அழைத்துச் செல்லப்படுகையில் தன் ஜீவனுக்குப் பயந்து ஒரு பெண்ணிடத்தில் மறுதலித்து



இயேசுவை அறியேன் என்றார் அன்பும், வைராக்கியமும் அங்கே தோல்வியைத் தழுவிற்று.

ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றபின் அவனது வாழ்வு நேர் எதிராய் மாறிவிட்டது. ஒரு பெண்ணுக்கு முன்பாய் இயேசுவை மறுதலித்த பேதுரு ஒரு கூட்டத்துக்கு முன்பு, ''இயேசுவைத் தேவன் எழுப்பினார். அதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம். (அப் 2:32) என்றும் ''நீங்கள் சிலுவையிலறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்று - அறியக்கடவீர்கள் (அப் 2:36) என்றும் வீரமுழக்கமிட்டார்.

இந்த மாபெரும் தைரியம், பெலன் பேதுருவுக்குள் எப்படி கிட்டியது தெரியமா? அவருக்குள் வாசம்பண்ண வந்த பரிசுத்த ஆவியானவர் அருளினார் என்பதே அர்த்தம் எனவே நிலையான, நிலைவரமான சாட்சியாக வாழச்செய்யும் பெலத்தைப் பெற்றுக் கொள்ள பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றுக் கொள்வது மிகவும் அவசியம்.

<u>3. வருகையில் எடுத்துக்கொள்ளப்பட பரிசுத்தஆவி தேவை.</u>

கிறிஸ்தவத்தின் உச்சக்கட்ட விசுவாசம் கர்த்தரின் வருகை ஆம். கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் இறங்கி வருவார். அப்போது உயிரோடிருக்கிற நாம் அவரோடு கூட மேகங்கள் மேல் எடுத்துக் கொள்ளப்படுவோம் என்று அப்போஸ் தலனாகிய பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதின முதலாம் நிருபம் நாலாம் அதிகாரம் பதினாறாம் வசனத்தில் எழுதியுள்ளார்.

நமது வாஞ்சை எதிர்பார்ப்பு இவை யாவும் கர்த்தரின் வருகையில் பங்கடைய வேண்டும் என்பதே. இரட்சிக் கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்தார்

என்பது பூமியிலுள்ள சபையைக் காண்பிக்கிறது. ஆனால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் நாம் அங்கமாக மற்றொரு தகுதி அவசியம்.

எபேசியர் 2ஆம் அதிகாரம் வசனம் 21, 22, சரியாக வாசித்துப் பாருங்கள். அவர் மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற் பேறானவர் களின் சர்வ சங்கமாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் பரிசுத்த ஆவியினாலேயே நாம் இசைவாய் இணைக்கப்படுகிறோம். என்பது மிக முக்கியமான சத்தியம். இன்னும் கூடுதலாக சொல்ல வேண்டுமானால் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றவர்கள் மாத்திரமே கர்த்தரின் வருகையில் எடுத்துக் கொள்ளப்பட முடியும் (எபேசியர் 1:13, 14) வசனங்களில் இந்த சத்தியம் வெளிப்படையாகவே எழுதப்பட்டுள்ளது.

‘‘வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள், அவருக்கு சொந்த மானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப் படுவார்கள் (சரீர மீட்பு) என்பதற்கு ஆவியானவர். நமது சுதந்தரத்தின் அச்சாரமாய் இருக்கிறார்’’ என்று பவுல் கூறுகிறார்.

தொடர்ந்து II கொரிந்தியர் 1:22 இல் அவர் நம்மை முத்தரித்து நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தைக் கொடுத்திருக்கிறார் என்றும் எழுதியிருக்கிறார். ஆவியின் அபிஷேகம் என்பதை அச்சாரம் என்றும் முத்திரை என்றும் எழுதுகிற பவுல் அந்த முத்திரை எதற்காக என்பதனை எபேசியர் 4:30 இல் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

‘‘மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவி....’’ என்று அவர் எழுதியதிலிருந்து



கர்த்தருடைய வருகைக்கு அச்சாரமாகவே அபிஷேக முத்திரை அருளப்படுகிறது என்று விளங்குகிறதல்லவா.

இதே பவுல் ரோமருக்கு எழுதும்போது (ரோமர் 8:23) ஆவியின் முதற்பலனைப் பெற்ற நாமும் கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திர சுவீகாரம் வருகிறதற்கு காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம் என்று ஆவியின் அபிஷேகம் பெற்றவர்களுக்கு உண்டான சிலாக்கியத்தை நினைவுப்படுத்தி எழுதுகிறார்.

வெளிப்படுத்தின விசேஷம் 22:17 இல் இயேசுவுக்குக் கொடுக்கப்படும் அழைப்பைப் பார்க்கிறோம். ஆவியும் மணவாட்டியும் சேர்ந்தே இயேசுவை வா என்று அழைக்கிறார் கள். எனவே பரிசுத்த ஆவியை முத்திரையாகப் பெற்ற விசுவாசிகளே அவரது வருகையில் அவரை வரவேற்க முடியும். எனவே கர்த்தரின் வருகையில் நாம் எடுத்துக் கொள்ளப்பட பரிசுத்த ஆவியின் அபிஷேகம் நமக்கு மிகவும் அவசியம்.

## 4. வருகையின் போது உயிர்த்தெழ பரிசுத்த ஆவி தேவை

முன்பு தெசலோனிக்கேயரில் கவனித்த பகுதியில் விடப்பட்ட வார்த்தையை இங்கு கவனிக்க விரும்புகிறேன். கர்த்தர் வரும்போது. உயிரோடிருக்கும் நமக்கு முன்பாக கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் என்று I தெசலோனிக்கேயர் 4:16 இல் சொல்லியுள்ளார்

மரித்தோரின் உயிர்த்தெழுதல் தான் கர்த்தரின் வருகையின் போது நடைபெறப் போகும் முதல் நிகழ்ச்சி. மரித்த எல்லா தேவ பிள்ளைகளும் அவரவர் வரிசையில் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் I கொரிந்தியர் 15:23 இல் எழுதியுள்ளார்.

இந்த வரிசையில் முதற்பலனாகக் கிறிஸ்து உயிர்த்தார். அவரின் இரகசிய வருகையின் போது, ஒரு கூட்டம்

பரிசுத்தவான்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அது மாத்திரமல்ல. உயிர்த்தெழாத மற்ற பரிசுத்தவான்கள் இயேசுவின் திறந்த வருகையின் போது உயிரோடு எழுந்து அவரோடு ஆயிரம் வருடம் (வெளி 20:4) ஆளுவார்கள் என்று வேதம் கூறுகிறது.

இப்படிப்பல உயிர்த்தெழுதலின் வரிசைகள் இருந்தாலும் நாம் உயிரோடு இருந்தால் அவரின் வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவதும் ஒருவேளை மரித்துவிட்டால் அவரின் வருகையின் போது உயிர்த்து எடுத்துக் கொள்ளப்படுவதே மேலான பாக்கியம்.

இதில் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் மாத்திரமே பங்கடைய முடியும். **கிறிஸ்துவுக்குள்** என்ற வார்த்தைக்கு பலர் பலவிதமான விளக்கத்தைக் கொடுக்க முடியுமென்றாலும் இப் புத்தகத்தில் ஒன்றை மாத்திரம் அழுத்திச்சொல்ல விரும்புகிறேன்.

கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவனல்ல. (ரோமர் 8:9) இந்த வசனத்தை தேவ ஒத்தாசையுடனும் திறந்த மனதுடனும் தியானித்துப் பாருங்கள். பரிசுத்த ஆவியைப் பெற்றவனே கிறிஸ்துவுக்கு சொந்தமானவன்.

தொடர்ந்து பவுல் ரோமர் 8:10இல் இயேசு எப்படி உயிர்த் தெழுந்தார், நாம் எப்படி உயிர்த்தெழ முடியும் என்பதை விளக்குவதைக் கவனியுங்கள். ‘‘அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களை உயிர்ப்பிப்பார்.

இந்த வசனத்தின் பொருள் புரிகிறதா. இயேசுவுக்குள் பரிசுத்த ஆவியானவர் இருந்தார். இயேசு மரித்த போதும் அவருக்குள் இருந்த ஆவியானவர் அவரை உயிரோடு



எழுப்பினார். அதைப் போலவே பரிசுத்த ஆவி உங்களுக்குள் இருந்தால் நீங்கள் மரித்தாலும் சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தை உயிரோடு எழுப்புவார் என்பதே அதன் பொருள்.

எனவே கர்த்தரின் வருகையின் போது ஓர் அற்புதம் நடக்கும். அன்று மரியாள் வாழ்த்தினபோது எலிசபெத்தின் கருவறைக்குள் இருந்த ஆவியினால் நிரப்பப்பட்ட யோவான் துள்ளினது போல இயேசு தாமே ஆரவாரத்தோடு வரும்போது அபிஷேகம் பெற்ற கல்லறைக்குள் கிடக்கும் பரிசுத்த வான்களின் சரீரம் துள்ளி உயிர்த்தெழும் - எடுத்துக் கொள்ளப்படும்.

வருகையில் எடுத்துக்கொள்ளப்பட மாத்திரமல்ல மேன்மையான உயிர்த்தெழுதலில் பங்கடையவும் ஆவியின் அபிஷேகம் மிகவும் அவசியம்.

<u>5. வழி தவறியவர்களை ஆதாயம்செய்ய அபிஷேகம் தேவை</u>

நமது இரட்சகராகிய கிறிஸ்து இந்த உலகத்தில் ஊழியம் செய்த விதத்தைக் கவனித்துப் பாருங்கள். யூதர்கள் உட்பட அநேகம் புற ஜாதிகளைத் தமக்கென ஆதாயம் செய்து கொண்டார். மத சடங்குகளை மீறி - தேச சட்ட திட்டங்களை மீறி ஆத்துமாக்கள் ஆட்டு மந்தையைப் போல் அவர்பின் ஓடி வந்தார்கள்.

இந்த விந்தைக்குக் காரணம் இயேசுவின் மனதுருக்கமே. நான்கு சுவிஷேஷங்களிலும், ஆத்துமாக்களைப் பார்த்த போதெல்லாம் இயேசு மனதுருகினார் - மனமிரங்கினார் கண்ணீர் விட்டார் என்றெல்லாம் எழுதியிருக்கிறது.

**எனவே ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய அடிப்படைத் தேவை அன்பு நிறைந்த உள்ளம்.**

இயேசு சீஷர்களைப் பார்த்து நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளுக்கும் சுவிஷேத்தைப் பிரசங்கியுங்கள் என்று சொன்னாலும் பரிசுத்த ஆவி பெறும் வரை எருசலேமை

விட்டுப் போகாதிருங்கள் என்று சொன்னதின் உள்அர்த்தத்தை உணருதல் அவசியம்.

பாரமில்லாதவன் சுவிசேஷத்தை சொன்னால் எந்தப் பயனும் கிடைக்காது. அன்பு இல்லாதவன் செய்யும் ஊழியத்தில் அறுவடை இருக்காது. எனவே பரிசுத்த ஆவி பெற்றுக்கொண்டு போகும்படி மொழிந்தார்.

இப்போது உள் அர்த்தத்தை உணர்ந்து கொண்டிருப்பீர் களென்று நம்புகிறேன். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலம் மனுஷருக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களில் மிகவும் குறிப்பிடத்தக்கதொன்று உண்டு. அஃதினைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் ரோமருக்கு எழுதின நிருபம் 5ஆம் அதிகாரம் 5ஆம் வசனத்தில் தெளிவாக எழுதியுள்ளார்.

‘‘மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது.’’ (ரோமர் 5:5)

பரிசுத்த ஆவியைப் பெற்றவன் ஆற்றலைப் பெற்றவன் என்பதை விட அன்பைப் பெற்றவன் என்பதே உண்மை. தேவனின் உன்னதமான அன்பு உள்ளத்தில் ஊற்றப்படுவது எத்தனை மகிமையான அனுபவம் என்று யோசித்துப் பாருங்கள்.

‘‘பெற்றவளுக்குத்தான் தெரியும் பிள்ளையின் அருமை’’ என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. அதைப்போலவே மீட்பருக்குத்தான் - சிருஷ்டிகருக்குத்தான் அழிந்து போகும் ஆத்துமாக்களின் அருமை தெரியும். அதை சாதாரண மனிதனால் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் ஆவியைப் பெற்றவன் ஆண்டவரின் அன்பின் ஸ்தானாதிபதியாகிறான். அவனுக்குள் அவனை அறியாமலேயே ஆத்துமபாரம் உண்டாகிறது.



எனவே தேவனுக்கு ஊழியம் செய்ய உன்னதருக்கென்று ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய, தேவ அன்பில் நிறைந்து தேவனை நேசிக்க தேவனைப் போலவே ஆத்துமாக்களை நேசிக்க பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மிகவும் அவசியமாயிருக்கிறது.

எனக்கு அன்பானவர்களே, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் முக்கியத்துவத்தை தெளிவாய் அறிந்திருப்பீர்களென்று நம்புகிறேன். இன்னும் ஏராளம் உண்டு ஏட்டில் கொள்ளாது. எனினும் அடிப்படையான ஐந்து ஆசீர்வாதங்களை உங்களுக்கு முன்பாக வைத்துள்ளேன்.

எனவே நீங்கள்

| | | |
|---|---|---|
| **வ**சனத்தின்படி | வாழ்வு | செய்ய |
| **வ**ல்லமையின் | சாட்சியாய் | திகழ |
| **வ**ருகையில் | எடுத்துக் | கொள்ளப்பட |
| **வ**ருகையில் | உயிரோடு | எழும்ப |
| **வ**ழிதவறியவர்களை | ஆதயாம் | செய்ய |

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் உங்களுக்கு மிகவும் அவசியம்.

❀❀❀

# 3

# அந்நிய பாஷை அவசியமா ? ஆதாரமுண்டா ?

கடந்த அத்தியாயங்களில் பரிசுத்த ‘‘ஆவியானவரைப் பற்றியும், பரிசுத்தாவியின் அபிஷேகத்தின் அத்தியாவசி யத்தைப் பற்றியும் தெளிவாய் விளங்கிக் கொண்டீர்கள். இந்த பரிசுத்தாவியின் அபிஷேகத்தில் அதிகமான விமர்சனத்துக் குள்ளாகிற அந்நிய பாஷையைக் குறித்துத்தான் இந்த அதிகாரம் முழுவதும் நாம் தியானம் பண்ணப் போகிறோம்.

‘‘அபிஷேகம்’’ - ‘‘அந்நியபாஷை’’ இவை இரண்டுமே இன்று வரை விமர்சித்து முடியாத காரியங்கள். ஆனால் எதையுமே திறந்த மனதுடன், குழந்தை உள்ளத்துடன் வசனத்தை வாசித்து அறிந்தால் குழப்பமில்லாமல் புரிந்து கொள்ள முடியும்.

இந்த அந்நியபாஷை என்ற வார்த்தையே எனக்கு அந்நியபாஷையாக இருப்பதால் தமிழில் இதை அயல்மொழி என்று குறிக்க விரும்புகிறேன்.

அந்நிய பாஷை, நவ நாவு மறுபாஷை,அயல்மொழி போன்ற வார்த்தைகள் ஒரே காரியத்தையே குறிக்கும்.

ஆவியின் அபிஷேகம் பெறும்போது நவ நாவுகளில் பேசுவதை சிலர் பலவிதமாக விமர்சனம் செய்து கொண்டிருக் கிறார்கள். ஒவ்வொரு சபை பிரிவும் தத்தம் வசதிக்கும் நிலைமைக்கும் ஏற்ப தங்கள் விளக்கங்களை அளிக்கின்றன.



அவைகள் வேத வசனத்தின் அடிப்படையில் விளக்கம் தரப்படாமல் அந்த சபை பிரிவின் ஸ்தாபக கர்த்தாக்களின் அனுபவத்தின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறபடியால் அவைகள் பூரணமாகாது.

நவ நாவுகள் அப்போஸ்தலர் காலத்தோடு முடிந்து விட்டது. எனவே அவை தேவையில்லையென்று ஒரு சாராரும் கடைசி காலத்தில் எழும்பும் தவளையின் ஆவி அஃதே என்று ஒரு சிலரும், உணர்ச்சியின் மிகுதியால் வெளிப்படும் பரவசப் பேச்சுக்கள் என்று சிலரும் சொல்கின்றனர்.

எனவே இந்த அந்நிய பாஷை அவசியம்தானா? அதற்கு வசனத்தின்படி ஆதாரம் உண்டா? என்பதை முதற்கண் அறிந்திடல் வேண்டும்.

(i) முதன் முதல் இந்த அந்நியபாஷையைக் குறித்த வாக்குத்தத்தத்தை நமது பிதாவானவர் தான் கொடுத்தார். பழைய ஏற்பாட்டில் ஏசாயா 28:11, 12 வாசித்துப் பாருங்கள் ‘‘பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷைகளினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார். இதுவே நீங்கள் இளைத் தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல்’’

இந்த வசனத்தின்படி தேவன் தாம் தெரிந்து கொண்ட ஜனத்தோடு அந்நியபாஷையில் பேசுகிறார் என்றும் அது தேவன் சொன்னபடி பரியாச உதடுகளால் இருக்கும் என்றும் அறிந்து கொள்ளுங்கள்.

(ii) அந்நிய பாஷையைக் குறித்து இரண்டாவதாக மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னவர் நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவே, மாற்கு எழுதின சுவிசேஷம் 16:17ஐ வாசித்துப் பாருங்கள். ‘‘விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன; என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளை பேசுவார்கள்.’’

**விசுவாசிகள் நவமான பாஷை பேசுவார்கள் என்பது இயேசு சொன்ன வார்த்தை. இதை நாம் அவசியம் இல்லை என்று தள்ளிவிட முடியுமா?**

*(iii)* அந்நிய பாஷை குறித்து பரிசுத்த ஆவியானவர் தமது பரிசுத்தவான்களை ஏவி எழுதியிருக்கும் வசனத்தை வாசித்துப் பாருங்கள்.

''அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்.'' (அப் 2:4)

மேற்கண்ட வசனத்தின் மூலம் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் வந்தபோது ஆவியினால் நிரப்பப்பட்ட அத்தனை பேரும் மறுபாஷைகளில் பேசினார்கள் என்பது தெரிகிறதல்லவா.

இப்படியிக்க பிதாவினால் வாக்குச் செய்யப்பட்டதும் இரட்சகர் இயேசுவினால் உறுதி செய்யப்பட்டதும் பரிசுத்த ஆவியினால் பெந்தெகொஸ்தே நாளில் பகிர்ந்தளிக்கப்பட்டது மான பற்பல பாஷை பேசும் கிருபை தேவையில்லாத ஒன்று என்று எவர் சொல்லக்கூடும்?

அபிஷேகத்தையம் அந்நிய பாஷையையும் இரண்டாகப் பிரித்துவிட முடியாது. ஏனெனில் பெந்தெதொஸ்தே நாளில் ஆவியானவர் இறங்கினபொழுது எல்லாரும் அந்நியபாஷை பேசியது போலவே தாம் அபிஷேகிக்கும் யாவருக்கும் இன்றளவும் அந்நிய பாஷையை தேவன் அருளுகிறார்.

கூடுதலாக சொல்வோமானால் ஒரு மனிதன் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டதற்கு அவர் பேசும் அந்நிய பாஷையே அடையாளமாக இருக்கிறது.

ஒரு சிலர் பெந்தெகொஸ்தே அன்று மாத்திரம்தான் அப்படி நடந்தது. அதற்குப் பின் அப்படிப்பட்ட அனுபவம் இல்லை என்கிறார்கள். பெந்தெகொஸ்தே நாள் வந்த பின் ஏறக்குறைய பத்து ஆண்டுகள் கழித்து அப்போஸ்தலனாகிய பேதுரு கொர்நேலியு என்பவன் வீட்டில் பிரசங்கம் செய்யும் போது எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள் என்ற வேதப்பகுதி மிகச் சரியான ஆதாரமாய் இருக்கிறது.



''இந்த வார்த்தைகளை பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மீதும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப் புகழுகிறதையும் பேதுருவோடு கூட வந்திருந்த விசுவாசிகள் கேட்டார்கள்''. (அப் 10:44 முதல் 46)

**அன்று கொர்நேலியு வீட்டார் ஆவியினால் நிரப்பப் பட்டதற்கு அவர்கள் பேசின பற்பல பாஷையே அடையாளமாய் இருக்கிறது.**

(iv) இப்படியே பல ஆதாரங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். எபேசுவுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் வந்தபொழுது அபிஷேகம் பெறாத விசுவாசிகள் மேல் கைகளை வைத்து ஜெபித்தார் (அப் 19:1-7). அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு அனைவரும் அந்நிய பாஷையிலே பேசினார்கள். இதுவும் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற சம்பவம்.

எனவே பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதெல்லாம் விசுவாசிகள் மீது இறங்கினாரோ அப்பொழுதெல்லாம் அந்த விசுவாசிகள் முதலாவது அந்நிய பாஷையைப் பேசினார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

சிலர் வேத வசனங்களை ஒரு பக்கமாய் பிடித்துக்கொண்டு சிந்தனைக்கு இடம் தராமல் தங்கள் இருதயத்தின் நினைவு களையே உபதேசமாகத் திணிப்பது வாடிக்கையாகிவிட்டது. அப்படிப்பட்டவர்கள், பரிசுத்த ஆவி இறங்கினார் என்று எழுதி அந்நிய பாஷையில் பேசினார்கள் என்று கூடுதல் குறிப்பு இல்லாத வேத பகுதிகளை எடுத்துக்காட்டி பார்த்தீர்களா! அந்நிய பாஷை இல்லாமல் பரிசுத்த ஆவியின் அபிஷேகம்'' என்று அலட்டிக் கொள்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் எடுத்துக்காட்டுகிற வேத பகுதியை உங்கள் முன்பு வைக்க விரும்புகிறேன். நேரம் இருக்குமானால்

நீங்களே அந்த வேத பகுதியை எடுத்து வாசித்துப் பாருங்கள். (இது பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு ஏறக்குறைய எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற சம்பவம்.)

அப்போஸ்தலர் 8 ஆம் அதிகாரம் 15 முதல் 19 வசனம் வரை வாசித்தால் சமாரியாவில் உள்ள மக்கள் பரிசுத்த ஆவியைப் பெறாததைக் கண்டு பேதுருவும், யோவானும் கைகளை வைத்து ஜெபித்தார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றார்கள் என்று எழுதியிருக்கிறது.

இந்தப் பகுதியை மேற்கோள்காட்டி அந்நிய பாஷையில் அவர்கள் பேசவில்லை என்பது வறட்டு வாதமே தவிர வசன ஆதாரம் கிடையாது. நான் சொல்கிறேன் அவர்கள் நிச்சயமாக அந்நிய பாஷையில் பேசியிருப்பார்கள். அப்போஸ்தலர் 8:18, 19ஐ வாசித்துப் பாருங்கள். அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவியானவர் தந்தருளப்படுகிறதை சீமோன் கண்ட போது அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டு வந்து...... எனக்கும் இந்த அதிகாரம் வேண்டும் என்றான்.

இந்த வசனத்தை நன்றாக சிந்தித்துப் பாருங்கள் அப்போஸ்தலர் கைகளை வைத்தார்கள். அப்பொழுது ஆவியானவர் இறங்கினதை சீமோன் பார்த்தான். அதன் அர்த்தம் என்ன? ஆவியானவர் இறங்கினதை எப்படிப் பார்க்க முடியும்? நிச்சயம் அவர்கள் அந்நிய பாஷையில் பேசியிருப் பார்கள் என்று விளங்குகிறதல்லவா.

பரிசுத்த ஆவி ஒரு மனிதன் மேல் இறங்கும்போது அவன் பேசுவதையும், நிரப்பப்படும்போது அவர்கள் செய்கையில் வித்தியாசத்தையும் காண முடியும். அப்போஸ்தலர் 2:33இல் பெந்தெகொஸ்தே அன்று பேதுரு எழும்பிப் பிரசங்கம் செய்யும்போது ''அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு பிதா அருளின வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த



ஆவியைப் பெற்று நீங்கள் இப்போது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்.'' என்ற வார்த்தையை உங்கள் சிந்தைக்கு விட்டுவிடுகிறேன்.

பரிசுத்த ஆவியானவர் இறங்கினார் என்று தெளிவாக எழுதி அந்நியபாஷை பேசினார்கள் என்று எழுதப்படாததால் அவர்கள் பேசவில்லை. எனவே அஃது தேவையில்லை என்ற அவசர முடிவுக்கு வந்துவிடக்கூடாது.

(V) சவுல் என்கிற பவுல் வாழ்க்கையை வாசித்துப் பாருங்கள். (அப் 9:16 முதல் 17) பவுல் இரட்சிக்கப்பட்டு பார்வையில்லாதவனாய் இருந்தபோது அனனியா என்கிற சீஷன் கர்த்தரின் வார்த்தைப்படியே ஜெபித்தான். அப்பொழுது அவன் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டான்.

உடனே, நிரப்பப்பட்டான் என்று எங்கு எழுதியுள்ளது? எனக் கேட்டு விடாதீர்கள். அனனியாவைக் கர்த்தர் அனுப்பினதற்கு நோக்கமே, ஒன்றுஅவன் பார்வையடைய வேண்டும். மற்றொன்று அவன் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட வேண்டும். அனனியா கை வைத்தவுடன் பார்வை வந்ததால் பரிசுத்த ஆவியும் வந்தது என்று சொல்லியா தெரிய வேண்டும்.

இங்கு நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால் பவுல் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டபோது அந்நிய பாஷை பேசியதாகக் குறிப்பு இல்லை. எனவே அவர் அந்நியபாஷை பேசவில்லை என்று நாம் சொல்லிவிட முடியுமா? வாசித்துப் பாருங்கள் வசனத்தை. உங்களெல்லாரிலும் நான் அதிகமாய் அந்நியபாஷை பேசுகிறேன். இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். (I கொரி 14:18) என்று எத்தனை மகிழ்கிறார் பாருங்கள்.

இத்தனைக்கும் பிறகும் சிலர் விடுவதாக இல்லை. முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுவது போல பவுல் ஏதோ ஒரு காரியத்திற்காக சொன்ன வசனத்தில் ஒரு பகுதியைப் பிடித்துக் கொண்டு அந்நியபாஷை பேச தடை உத்தரவு பிறப்பித்துக் கொண்டிருக்கின்றனர்.

அந்நிய பாஷைகளானாலும் ஒழிந்து போம். I கொரி 13:8. இந்த வார்த்தைதான் அந்நியபாஷைக்கு எதிராக வீசப்படும் முதல் அஸ்திரம். ஆனால் சற்று இந்த வசனத்தை முழுமையாக வாசித்துப் பாருங்கள்.

அன்பு ஒருக்காலும் ஒழியாது தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஒய்ந்துபோம் அறிவானாலும் ஒழிந்து போம். I கொரிந்தியர் 13:8

I கொரிந்தியர் 13:13 இல் பவுல் மிக முக்கியப்படுத்திக் காண்பிக்க விரும்புவது அன்பு சபைக்கு வேண்டும் என்பதே. அன்பு பூலோகத்திலும் இருக்கும், பரலோகத்திலும் இருக்கும். அது நித்தியமானது.

அதே சமயம் கர்த்தரின் வருகையில் அல்லது மகிமையில் (நிறைவானது வரும் போது) தீர்க்கதரிசனம் தேவைப்படாது அந்நியபாஷை தேவைப்படாது. நமது அறிவும் பயன்படாது எனவேதான் அவைகள் ஒழிந்துபோம் என்றார்.

கோபித்துக் கொள்ளாதீர்கள். அந்நியபாஷை ஒழிந்து போய்விட்டது என்று கேட்போரே மிகுந்த அடக்கத்துடன் கேட்கிறேன். உங்களுக்கென்ன அறிவு ஒழிந்து போய்விட்டதா?

எனக்கன்பானவர்களே இயற்கைக் காட்சிகளை இயற்கைக் கண்களோடு பாருங்கள். அதன் நிஜத்தன்மை தெரியும். மஞ்சள் கண்ணாடியோ சிவப்புக் கண்ணாடியோ மாட்டிக் கொண்டால் மாயத்தோற்றத்தைப் பிறப்பிக்கும். அப்படியே வேத வசனங்களை சொந்த விருப்பு வெறுப்பின்றி கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன் என ஜெபத்துடன் வாசியுங்கள். ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

பரிசுத்த ஆவி என்பது சிலர் சொல்கிறபடி தவளையின் ஆவியல்ல எந்த ஒரு தெரியாத மொழியும் நமக்கு பைத்திய மாகத்தான் தோன்றும். நடைமுறையில் நமது தமிழகத்தை எடுத்துக்கொள்ளுங்கள், தமிழ் மொழியை செந்தமிழ் என்று



சொல்லுகிறவர்கள் இந்தியைக் குறித்து எவ்வளவு இழிவாகச் சொல்கிறார்கள் என்பதைக் கவனித்துப் பாருங்கள்.

புரியாததும், வெறுப்புமே மற்ற மொழிகளை இப்படிப் பேசச் செய்கிறது. அதைப் போல அயல்மொழி பேசுவதை வெறுப்பவர்களும் விரும்பாதவர்களும் வேத வசனத்தை தவறாகப் பயன்படுத்தி தவளையின் ஆவி இதுதான் என்று பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசுகிறார்கள்.

அப்படியானால் இதற்கு சரியாகப் பதில் எப்படி சொல்வது என்ற திகைப்பு ஏற்படலாம். கவலைப்பட வேண்டியதில்லை, ஆவியானவர் கலகத்தின் தேவனல்ல. சமாதானத்தின் தேவன். அவர் கூறும் பதிலை வேத வசனத்தில் தெளிவாய்க் கண்டு கொள்ளுங்கள்.

தவளைக்கு ஒப்பான ஆவிகள் இப்பொழுது இல்லை. இப்போது வராது. வெளிப்படுத்தல் 16:13, 14 இல் தான் இந்த தவளையின் ஆவியைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. ‘‘அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத் தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டு வரக் கண்டேன். அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்’’.

இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில் சபை எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் இந்தப் பூமியில் நடக்கும் அந்திக் கிறிஸ்துவின் ஆட்சியின் இடைக்காலத்தில் வெளிப்பட்டு அர்மகெதோன் யுத்தத்திற்கு ஆயத்தம் செய்யும்.

ஒரு சிலர் இன்றைக்கு நடக்கும் பரிசுத்த ஆவியின் அற்புதங்களை இந்தத் தவளையின் ஆவி செய்யும் அற்புதங்கள் என்று போதிப்பது வேதனைக்குரியது.

அப்போஸ்தலர் நடபடிகளில் 10:38இல் பேதுரு ‘‘நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன்

அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்'' என்றார்.

ஆனால் இதை புரிந்து கொள்ளாத மாற்றார் என்ன சொன்னார்கள் தெரியுமா. இவன் பிசாசுகளின் தலைவன் - பெயல்செபூல் என்றெல்லாம் அழைத்தார்கள். இயேசுவுக்கே இந்த ஏச்சும் பேச்சும் வந்தது உண்மை என்றால் நமக்கு வருவது ஒன்றும் பெரிய காரியம் இல்லை.

ஆவிக்குரிய வரங்கள் என்பது ஆதிசபைக்கு மாத்திரம் அருளப்பட்ட அற்ப ஆயுசு உள்ள வாக்குத்தத்தம் அல்ல.

இதுவரை அந்நியபாஷை ஆவியானவரின் அநுக்கிரகம் என்றும் அவசியம் என்றும் கண்டீர்கள். இப்போது அது எத்துணை மேன்மையான அனுபவம் என்பதை சற்று விளக்க விரும்புகிறேன்.

பரிசுத்த ஆவியானவர் சபைக்கு அருளிய 9 வரங்களைக் குறித்து I கொரிந்தியர் 12:8, 9 , 10 வசனங்களில் எழுதப்பட்டு இருக்கிறது. இந்த வரங்களை வரிசைப்படி எழுதுகிறேன் கவனியுங்கள். (வரங்களைப் பற்றி தனியாகப் பின்னர் எழுதுகிறேன்.

**I கொரிந்தியர் 12:8-10**

1. ஞானத்தைப் போதிக்கும் வசனம்
2. அறிவை உணர்த்தும் வசனம்
3. விசுவாசம்
4. குணமாக்கும் வரங்கள்
5. அற்புதங்களைச் செய்யும் சக்தி
6. தீர்க்க தரிசனம்
7. ஆவிகளைப் பகுத்தறிதல்
8. பற்பல பாஷை பேசுதல்
9. பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்



இந்த ஒன்பது வரங்களையும் மீண்டும் வாசித்துப் பாருங்கள். உங்களால் ஒன்றைக் கண்டுபிடிக்க முடியும். இந்தப் பட்டியலில் முதல் ஏழு வரங்களும் பழைய ஏற்பாட்டில் பல பக்தர்களிடத்தில் கிரியை செய்திருக்கிறது. பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கு அருளப்படாத இரண்டு வரங்களை கர்த்தர் புதிய ஏற்பாட்டு சபையாகிய தனது மணவாட்டிக்கு அருளி இருக்கிறார். அது

1. <u>பற்பல பாஷை பேசுதல்</u>
2. <u>பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்</u>

பிரியமானவர்களே, தேவன் புதிய ஏற்பாட்டு சபைக்கு சிறப்பாக அருளிய இந்த வரங்களை வேண்டாம் என்று சொல்வதோ அல்லது வெறுப்பதோ நியாயமா !

இன்னும் இயேசுகிறிஸ்து கடைசியாகச் சொன்ன வேதப் பகுதியை உங்ளுக்குக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். மாற்கு 16:17ஐ சரியாக வாசித்துப் பாருங்கள். அங்கே தன்னை விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள் என்னென்ன என்பதை இயேசு சொல்லியுள்ளதைக் கீழே தருகிறேன். கவனியுங்கள்.

1. பிசாசுகளைத் துரத்துவார்கள்
2. நவமான பாஷைகளைப் பேசுவார்கள்
3. சர்ப்பங்களை எடுப்பார்கள்
4. சாவுக்கேதுவானவைகள் சேதப்படுத்தாது
5. வியாதியஸ்தர்களை குணமாக்குவார்கள்

இந்தப் பட்டியலில் ஒரு காரியம் உண்டு இரண்டாவது அடையாளமாகிய நவமான பாஷைகளை பேசுதல் தவிர மற்ற 4 அடையாளங்கள் உங்களில் நிறைவேற வேண்டுமானால் நீங்கள் தனியே இருந்தால் நிறைவேறாது.

அவைகள் நிறைவேற பிசாசு பிடித்தவன் சர்ப்பம், சாவுக் கேதுவான உணவு உட்கொண்ட சூழ்நிலை, வியாதியஸ்தர்

இவர்கள் தேவை. இவர்கள் இருந்தால் நீங்கள் இயேசுவின் நாமத்தில் கிரியை நடப்பித்து தேவனை மகிமைப்படுத்த முடியும்.

ஆனால் எல்லோருமே நல்ல நிலையில் இருக்கும்போது அந்த இடத்தில் என்ன செய்ய முடியும்? இரண்டாவதாக சொல்லப்பட்ட நவமான பாஷையை பேசமுடியும். நன்றாக கவனியுங்கள். மற்ற நான்கு அடையாளங்கள் நிகழ மாறுபட்ட சூழ்நிலை அல்லது மற்றொரு நபர் வேண்டும். ஆனால் நவமான பாஷையை யார் இல்லாவிட்டாலும் நீங்கள் தனியே பேசலாம். அது பெரிய அடையாளமாக இருக்கும்.

இயேசு சொன்ன ஐந்து வித அடையாளங்களில் எல்லா சூழ்நிலையிலும் வெளிப்படுத்தக்கூடிய இந்த நவமான பாஷை பேசுதல் எத்துணை முக்கியமானது என்று யோசித்துப் பாருங்கள்

**அந்நியபாஷை அலட்சியப்படுத்தக் கூடிய ஒன்றல்ல.** அவசியம் தேவையான ஒன்று.

பிதா வாக்குத்தத்தம் செய்த
இயேசு அடையாளமாய்ச் சொன்ன
பரிசுத்த ஆவி ஈந்த
அப்போஸ்தலர் யாவரும் பேசின
ஆதித் திருச்சபை அனுபவித்த

இந்த அனுபவத்தை விட்டுவிடாதீர்கள். கடைசியாக அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய வசனத்தை உங்களுக்கு ஞாபகப்படுத்தி இந்த அதிகாரத்தை முடிக்கிறேன்.

**நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன். I** கொரிந்தியர் 14:5.



# 4

# அந்நிய பாஷைகளினால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்

அயல்மொழிகள் பேசுவதை ஒத்துக்கொள்ளும் சிலர் அது தற்போது நமக்கு அவசியமில்லை என்று கூறுவது பரவலாக காணப்படுகிறது.

அவசியமில்லாத ஒன்றை ஆவியானவர் ஒருபோதும் தமது சபைக்குத் தரமாட்டார். வேதத்தை சரியாக வாசித்துப் பார்த்தால், அல்லது தூய ஆவியின் அனுபவத்தை அடைந்தவர்களின் வாழ்க்கையை கவனித்துப் பார்த்தால் அந்நியபாஷையில் பேசுவது எவ்வளவு ஆசீர்வாதமானது என்பதை தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

இந்த அதிகாரம் முழுவதும் பரிசுத்த ஆவியில் நிறைந்து பேசப்படும் அந்நிய பாஷையால் நமக்குக் கிட்டும் உன்னதமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## <u>*1.* அயல்மொழியால் இரகசியங்களைப் பேசுகிறோம்.</u>

அந்நிய பாஷையில் பேசுகிறவன் ஆவியினாலே தேவனோடு இரகசியங்களைப் பேசுகிறான் (Iகொரிந்தியர் 14:2). எத்துணை மகிமையான அனுபவம் பாருங்கள். இந்த பூமியில் நீங்கள் அந்நிய பாஷையில் பேசுவதை உங்களை சுற்றியுள்ள

எந்த மனிதராலும் புரிந்து கொள்ள முடியாது. அதே வேளையில் தேவன் தெளிவாக அதைப் புரிந்து கொள்கிறார்.

இதனால் நமக்கு மிகப்பெரிய ஆசீர்வாதம் இருக்கிறது. நமக்குள் இருக்கும் ஆவியானவர் நமது குறைகளை (பாவங்களைக் கூட) நமது சொந்த நாவினால் அறிக்கை செய்யச் செய்வார். அந்த அறிக்கையை எவரும் புரிந்து கொண்டு நம்மைக் குற்றப்படுத்த முடியாது. அதே வேளையில் தேவன் நமது காரியங்களை, அறிக்கைகளை ஏற்றுக்கொண்டு மேலும் நமக்கு ஒத்தாசை செய்கிறார்.

சில வேளைகளில் அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்தை மேற்கோள்காட்டி பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமில் கூடி வந்தவர்களுக்கு சீஷர்கள் பேசின அந்நியபாஷை புரிந்ததே. இப்படியிருக்க தற்போது பேசுகிறவர்களின் பாஷை எவருக்கும் புரிவதில்லையே. இஃது ஏன்? என்று கேள்வி கேட்கிறார்கள்.

அப்போஸ்தலர் காலத்தில் நடந்தது என்ன தெரியுமா? அன்று பெந்தெகொஸ்தே பண்டிகை; எருசலேமின் நாலா திசைகளிலிருந்தும் வந்த 16 விதமான வேறுபட்ட மொழி பேசும் கூட்டம் அங்கே கூடி வந்திருந்தார்கள். இன்றைக்கும் இப்படிப் பட்ட பல்வேறு மொழி பேசும் கூட்டம் ஒன்றாய்க்கூடி ஒரே இடத்தில் ஆராதித்தால் இந்த அதிசயம் மீண்டும் நடக்கும் என்பது உண்மை.

என்னுடைய அனுபவத்தில், கை நாட்டு வைக்க கட்டை விரலைக் கூட சரியாகக் காண்பிக்கத் தெரியாத அபிஷேகம் பெற்ற சிலர் ஆவியில் நிறைந்து அழகு நடையில் ஆங்கிலத்தில் பேசியதைக் கேட்டிருக்கிறேன். சாதாரண நேரங்களில் எந்தவித ஆங்கில அறிவும் இல்லாத இவர்கள் ஆவியின் நிறைவின்போது பேசுவதை நீங்கள் கேட்டால் ஆனந்தக் கூத்தாடி விடுவீர்கள்.



நான் மதுரையிலிருந்த போது ஆவியில் நிறைந்து அயல்மொழியில் பேசுவதைக் கவனித்த ஜானகிராமன் என்பவர் (முன்னே அவர் திருநகரிலிருந்தார். தற்போது எங்கு இருக்கிறார் என்று தெரியாது) உங்களுக்கு எப்படி எங்கள் மொழியாகிய சௌராஜ்டிரா தெரியும் என்று கேட்டார். உங்கள் மொழி எனக்குத் தெரியாது என்று சொன்னேன். பின்னே எப்படி நேற்று நீங்கள் மந்திரம் (ஜெபம்) சொல்லும்போது எங்கள் பாஷையில் பல சொற்களில் சொன்னீர்கள் என்றார். நான் எனக்குள் வியந்து இந்த வரத்தைக் குறித்து அவருக்கு விவரித்தேன்.

மொழி என்பது ஒலிக்குறிப்புகளே அன்றி வேறொன்று மில்லை. எனவே அறியப்படாத மொழிகளின் ஒலிக்குறிப்புகள் நமக்கு வேடிக்கையாகத்தான் இருக்கும். நமக்கு வேடிக்கை யாயிருக்கும் சில ஒலிக்குறிப்புகள் சில மொழிகளில் மிகச் சிறந்த சொல்லாயிருக்கும்.

அயல்மொழியைக் குறித்த விமர்சனம் செய்த நபரைக் குறித்து ஒரு புத்தகத்தில் வாசித்ததை இங்கு குறிப்பிட விரும்புவது நல்லது என்று நினைக்கிறேன்.

அயல்மொழியை நம்பாத ஒருவர் விசுவாசிகள் பேசும் அந்நிய பாஷைகளை டேப்ரிக்கார்டரில் பதிவு செய்து இடையில் தானே சில வார்த்தைகளை அந்நிய பாஷை போல் பேசி அந்தக் கேசட்டை மொழி ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றிற்கு அனுப்பி இவைகள் எந்தெந்த மொழி என்று கண்டு சொல்லுங்கள் என்று கேட்டிருந்தாராம்.

கொஞ்ச நாட்கள் கழித்து அவருக்குப் பொறுப்பான பதில் வந்தது. ஒவ்வொரு பேச்சுக்கும் பக்கத்தில் இந்த மொழியில் இந்த அர்த்தம் என்று குறிப்பு வந்தது. ஆனால் ஒரு குறிப்பிட்ட எண்ணில் இது எந்த மொழியுமல்ல. இது ஒரு பைத்தியக் காரனின் உளறல் என்று குறிப்பு இருந்ததாம்.

அந்தப் பைத்தியக்காரப் பேச்சு வேறு யாருடையதுமல்ல இந்தக் கேசட்டை அனுப்பினவரின் மாம்சப் பேச்சுக்களே. அந்த நபர் இந்த அந்நியபாஷையின் மகத்துவத்தைக் கண்டு இரட்சிக் கப்பட்டார் என்று அந்தப் புத்தகக் குறிப்பு கூறுகிறது.

எனக்கன்பானவர்களே அயல்மொழியில் பேசுகிறவன் ஆண்டவரோடு இரகசியங்களைப் பேசுகிறான் என்பதை மறந்துவிடக் கூடாது. சில வேளைகளில் அந்நியபாஷையை உலகிலுள்ள எந்த மொழியினராலும் புரிந்து கொள்ள முடியாது ஏனென்றால் அந்நிய பாஷையைக் குறித்து அப்போஸ் தலனாகிய பவுல் சொல்லியிருப்பதைக் கவனித்துப் பாருங்கள்.

I கொரிந்தியர் 13:1 இல் நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும்............ சில வேளையில் நமக்குத் தெரியாத மனுஷர் பாஷைகளைப் பேசுகிறோம். சில வேளையில் தேவ கிருபையால் எந்த மனிதனும் (சாத்தானும் கூட) புரிந்து கொள்ள முடியாத தூதர் பாஷையிலும் பேசுகிறோம்.

எனவே உங்கள் அந்தரங்கம் மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கை கட்டப்பட, நீங்கள் தேவனோடு பேச இரகசியங் களைப் பகிர்ந்து கொள்ள அந்நிய பாஷையில் பேசுகிற அனுபவம் மிகவும் உதவியாயிருக்கிறது என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

<u>*2.* அந்நியபாஷை ஆண்டவரோடு ஐக்கியப்படுத்துகிறது.</u>

ஆவிக்குறிய ஒன்பது வரங்களை நீங்கள் நன்றாய்க் கவனித்துப் பாருங்கள். மற்ற எல்லா வரங்களை விட ஒரு சிறப்பான காரியத்தை அந்நியபாஷையில் பேசுகின்ற வரத்தில் காணலாம். மற்ற எட்டு வரங்களும் நம்மை மனிதரோடு ஊழியத்தோடு ஐக்கியப்படுத்துகிறது. உதாரணமாக வியாதியஸ்தர்களைக் குணமாக்கும்போது மனிதருக்கு ஊழியம் செய்கிறோம். தீர்க்கதரிசனம் சொல்லும்போதும் மனிதருக்கே ஊழியம் செய்கிறோம்.



ஆனால் அந்நியபாஷையில் நாம் பேசுகிறபோது எந்த மனிதருக்கும் ஊழியம் செய்யாமல் எந்த மனிதரோடும் பேசாமல் ஆண்டவரோடு பேசுகிறோம். ஆகவே ஆண்டவருடன் நேரடியாக நம்மை ஐக்கியப்படுத்துகிற உன்னதமான வரம் அந்நியபாஷையில் பேசுதலே.

மனிதராகிய நாம் மனிதர்களோடு பேசுகிறோம். ஆனால் தேவனோடு பேசமுடியுமா? ஜெபிக்கலாம். ஆனால் ஐக்கியப்பட்டு அவரின் திருவுளத்தைப் புரிந்துகொண்டு அவரோடு ஒன்றரக் கலந்து பேச முடியுமா என்றால் அதற்கு சரியான வழி அந்நியபாஷை வரமேயன்றி வேறொன்றும் கிடையாது என்பது உண்மை.

<u>3. பக்தி விருத்திக்குப் பற்பல பாஷை தேவை.</u>

அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான் என்று I கொரிந்தியர் 14:4 இல் சொல்லப்பட்டதை இங்கு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

நாம் கிறிஸ்துவுக்குள் வாழ, கிறிஸ்துவுக்குள் தேற, கிறிஸ்துவுக்குள் வளர, பக்திவிருத்தி மிகவும் அவசியம். இந்த பக்தி விருத்தி அடைய அந்நியபாஷையின் வரம் பெரிதும் உதவுகிறது.

தமிழில் ஒரு சொல் வழக்கு உண்டு. வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும். பயிர் உயர குடி உயரும், குடி உயர கோன் உயரும். அப்படியே தனி நபர் பக்திவிருத்தி குடும்ப பக்தி விருத்தியைக் கொண்டு வரும். குடும்ப பக்தி விருத்தி சபையில் பக்தி விருத்தியை கொண்டு வரும் சபையின் பக்தி விருத்தி சமுதாயத்திற்கு பக்தி விருத்தியை கொண்டு வரும் எனவே இந்த பக்திவிருத்தியைக் கொண்டு வருவது அந்நிய பாஷையைப் பேசுகின்ற அனுபவமே என்பதை மறந்து விடாதீர்கள்.

பக்திவிருத்தி அடைவதற்கு அந்நியபாஷை மாத்திரமே வழி என்று நான் கூறவில்லை. ஒரு மனிதன் தனது பக்தியைப்

பெருக்கிக் கொள்வதற்கு பல்வேறு கிறிஸ்தவ அனுபவங்கள் உண்டு. ஜெபித்தல், வேதம் வாசித்தல், ஆலயத்திற்கு ஒழுங்காய் செல்லுதல் போன்றவை கூட ஒரு மனிதனுக்கு பக்தி விருத்தியைக் கொண்டு வருகிறது என்பதும் உண்மை.

இங்கு நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால் பக்தி விருத்தியை நமக்கு உண்டாக்குகிற பல்வேறு வாய்க்கால்களில் பற்பல பாஷை பேசுதலும் ஒன்று என்பதே. வேறுவிதமாக சொல்லுவதானால் பற்பல பாஷை பேசுவதால் கிடைக்கும் ஆசீர்வாதங்களில் பக்திவிருத்தியும் ஒன்று என்பதே.

எனவே பற்பல பாஷையில் பேசுவதை தள்ளி விடாதீர்கள் தவிர்த்தும்விடாதீர்கள். சோர்ந்து போகிற வேளையிலெல்லாம் தொய்ந்து போகிற வேளையிலெல்லாம் சற்று அமைதியான சூழ்நிலையில் அமர்ந்து ஆவியில் நிறைந்து அந்நிய பாஷையில் பேசிப்பாருங்கள். படி பால் குடித்தது போல ஒரு புது பெலன் உங்களுக்குள் எழுந்திருக்கும். விசேஷமாக தேவனுடைய ஊழியத்திலிருப்பவர்கள் இப்படி நாள்தோறும் ஆண்டவருடைய சமூகத்தில் ஆவியில் நிறைந்து அயல்மொழியில் பேசுவது நமக்கு நல்லது. ஒவ்வொரு நாளும் இப்படிப்பட்டவர்களுக்கு புது ஆவிக்குரிய வல்லமை தேவைப்படுகிறது. ஆவிக்குரிய செய்தி கொடுக்க வேண்டும். அலசடிப்படும் நபர்களுக்கு ஆலோசனைகள் வழங்க வேண்டும். அலைகடல் போன்ற பல்வேறு ஊழியப் பிரச்சினை களைத் தாங்கவேண்டும்.

இப்படிப்பட்ட அநுதின தேவையை சந்திப்பதற்கு கிரமமான பக்திவிருத்தி நமக்கு அவசியம். அந்த பக்திவிருத்தி யைக் கொண்டுவர பற்பல பாஷையில் பேசி மகிழுங்கள்.

கர்த்தருடைய சமூகத்தில் பற்பல பாஷையில் தேவனைத் துதித்து மகிமைப்படுத்தி பின்னர் பிரசங்கம் செய்ய பீடத்திற்கு சென்று நின்று பாருங்கள். பீடத்தில் அக்கினி எரியும், பிரசங்கத்தில் அனல் பறக்கும், கேட்போர் உள்ளம் கொழுந்து



விட்டு எரியும். தயாரிக்கப்பட்ட பிரசங்கக் குறிப்புகள் ஓரங்கட்டப்படும். நீங்கள் நினைத்திராத, எதிர்பார்த்திராத சிந்தனைகள், ஆலோசனைகள், வெளிப்பாடுகள் அருவிபோல் உள்ளத்திலிருந்து வந்துகொண்டே இருக்கும்.

இதற்கெல்லாம் வசனம் எங்கே என்று கேட்டுவிடாதீர்கள். இது பக்திவிருத்தியினால் உண்டாகிற அற்புதமான அனுபவம் இது அனுபவத்தினால் அடையக்கூடிய ஒன்றே தவிர ஏட்டறிவினால் கிட்டாது.

அந்நியபாஷையில் பேசுகிறவன் மனிதரோடு அல்ல, தேவனோடு பேசுகிறான். தேவனோடு பேசின மோசேயின் முகம் எழுத்தின்படி எவ்வளவு பிரகாசமாயிருந்ததோ அதைப்போல ஒரு ஆவிக்குரிய பிரகாசம் தோன்றுவது அதிக நிச்சயமல்லவா. அது மாத்திரமா முதற்கண் தேவனோடு சாதாரண காரியங்களல்ல இரகசியங்களைப் பேசுகிறீர்கள். அதாவது இரகசியம் பேசுகிற அளவுக்கு தேவனைக் கிட்டிச்சேர்ந்து விடுகிறீர்கள், இரண்டாவது தேவனை முழு இருதயத்தோடு துதிக்க ஆரம்பித்து விடுகிறீர்கள்.

நான் சொல்வது உண்மை. உண்மையிலும் உண்மை அந்நியபாஷையில் பேசினார்கள் என்று அப்போஸ்தலர் நடபடிகளில் வருகிற இடங்களையெல்லாம் தெரிந்தெடுத்து வாசித்துப் பாருங்கள். அந்நிய பாஷையில் பேசினார்கள் என்றால் என்ன பேசினார்கள் தெரியுமா? தேவனைப் புகழ்ந்தார்கள்.

அந்நியபாஷையில் நீங்கள் பேசும்போது வாயார மனதாரக் கர்த்தரைப் புகழுகிறீர்கள். ஒரு மொழியில் இல்லாத வார்த்தைகள் வேறொரு மொழியில் இருக்கலாம். ஆகவே பற்பல பாஷையில் நீங்கள் பேசும்போது தற்பரனை நீங்கள் புகழுகிறீர்கள். அதனால் ‘‘ஸ்தோத்திரபலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்’’ என்ற வார்த்தையின்படி கர்த்தரை மிக உன்னதமான நிலையில் நீங்கள் மகிமைப்படுத்துகிறீர்கள். அதனால் உங்கள் பக்தி விருத்தியடைகிறது.

இப்படி, நீங்கள் வளர்வது மாத்திரமல்ல இப்படிப் பட்டவர்களின் சபைகளும் வளர்கிறது. ஆகவே நீங்கள் பக்திவிருத்தியடைய, உங்கள் சபை பக்திவிருத்தியடைய தடை செய்யாமல் சலிப்படையாமல் தாராளமாய் அந்நியபாஷை பேசி கர்த்தரை மகிமைப்படுத்துங்கள். பக்தியில் வளருங்கள்.

4. ஆவியில் ஜெபிக்க அந்நிய பாஷை உதவுகிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் I கொரிந்தியர் 14:15இல் 'நான் ஆவியோடு விண்ணப்பம் பண்ணுவேன் கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்' என்று எழுதுவதை சற்று சிந்தித்துப் பாருங்கள். ஜெபிக்கும் முறையில் இரண்டுவிதம் உண்டு. முதலாவது கருத்தோடு ஜெபித்தல். இதில் நமது சிந்தனாசக்தி மிக முக்கியம். நாம் யோசித்து மனது விரும்பினதைக் கேட்டு ஜெபிக்கிறோம்.

இரண்டாவது ஆவியில் விண்ணப்பம் பண்ணுதல் தனியான கிருபை. இதில் நமது மனதுக்கு (MIND) வேலை கிடையாது, நமது ஆவியே தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணுகிறது.

இது புரிந்து கொள்ள சற்றுக் கடினம் தான். ஆனால் தேவன் வைத்திருக்கும் உன்னதமான அனுபவம் இஃது. ''நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம் பண்ணினால் என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயல்லாமல் என் கருத்து பயனற்றதாக இருக்கும்'' என்று பவுல் I கொரிந்தியர் 14:14இல் கூறியுள்ளபடி, நமக்குள் இருக்கிற ஆவி தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணுகிறது.

யூதா நிருபத்தில் 20ஆவது வசனத்தில் ''நீங்களோ பிரியமானவர்களே உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி......... காத்திருங்கள்'' என்று குறிப்பிட்டு சொல்கிற அனுபவம் இதுவாகத்தான் இருக்க முடியும்.



ஆவியில் ஜெபிப்பது நமக்கு மிகப்பெரிய ஆசீர்வாதங் களை அனுபவங்களை அள்ளித் தருகிறது. சில வேளையில் சூழ்நிலைகளின் நிமித்தம், குழப்பத்தின் நிமித்தம் எதற்காக ஜெபிப்பது? எப்படி ஜெபிப்பது? என்ற திகைப்பு நமக்கு ஏற்படுவது இயற்கை. இன்னும் சில வேளைகளில் எது தேவசித்தம் என்று அறிந்து ஜெபிக்க முடியாத சூழ்நிலைகள் வருவது இயல்பே.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நம்மை சரியான பாதையில் பரிசுத்த ஆவியானவர் நடத்துகிறார். அப்போதலனாகிய பவுல் ரோமாபுரிக்கு எழுதின நிருபத்தில் 8:26ஐ கவனித்துப் பாருங்கள்.

''அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார் நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்''.

இந்த வசனத்தின்படி நமக்குள் இருக்கும் ஆவியானவர் நமது ஆவியினால் பெருமூச்சுகளோடு அந்நியபாஷையில் விண்ணப்பம் பண்ணுகிறார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவும் இல்லை, காது கேட்கவும் இல்லை, அவைகள் மனுஷடைய இருதயத்தில் தோன்றவு மில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்தறிந்திருக்கிறார். *(I கொரி 2:9.10).*

இந்த வசனங்கள் எவ்வளவு தெளிவாய் இருக்கிறது பாருங்கள். தேவனின் ஆழங்களை பரிசுத்த ஆவியின் உதவியோடு மாத்திரமே புரிந்துகொள்ள முடியும். எனவே நாம் நமது சிந்தனைக்குட்பட்டு கருத்தோடு ஜெபிக்கிற ஜெபத்தோடு

நின்றுவிடாமல் ஆவியில் நிறைந்து, நமது ஆவியில் விண்ணப்பம் பண்ண வேண்டியது அவசியம்.

நாம் கருத்தோடு ஜெபிக்கும்போது நமது சித்தத்தின் மேல் நின்று கொண்டு தேவனை நோக்கி ஜெபிக்கிறோம். ஆனால் ஆவியில் ஜெபிக்கும்போது தேவ சித்தத்தின்படி தேவனை நோக்கி ஜெபிக்கிறோம்.

நாம் கருத்தோடு ஜெபிக்கும்போது ஒரு வரையறைக்கு உட்பட்டு ஜெபிக்கிறோம், பெலவீனமான மாம்சத்தில் சோர்ந்து போக வாய்ப்பு உண்டு. ஆவியில் ஜெபிக்கும்போது நமது அறிவுக்கும் விசுவாசத்திற்கும் அப்பாற்பட்டு தூய ஆவியின் உதவியால் இயற்கைக்கு மேலான அனுபவங்களோடு ஜெபிக்கிறோம்.

இங்கே ஒரு காரியத்தை தெளிவுபடுத்த விரும்புகிறேன். நீங்கள் வெறுமனே ஆவியில் ஜெபித்துக்கொண்டு இருந்தால் போதாது. ஏற்கனவே நாம் கவனித்தபடி உங்கள் கருத்து வீணாய் இருக்கும். நீங்கள் ஜெபித்தது உங்களுக்கும் உங்களை அடுத்தவர்க்கும் புரியாததினால் பலனை உங்களால் பூரணமாக அனுபவிக்க முடியாது. அதைப் போலவே கருத்தாய் ஜெபிப்பதிலும் சில குறைபாடுகள் உண்டு. உங்கள் சூழ்நிலைக்கு உட்பட்டு, விசுவாச வரையரைக்கு உட்பட்டு ஜெபிப்பதினால் பூரணமான பதிலைப் பெறமுடியாது.

எனவே சரியான, செழுமையான அனுபவங்களைப் பெற பவுல் சொல்லுகிறபடி நீங்கள் ஆவியிலும் விண்ணப்பம் பண்ண வேண்டும், கருத்தோடும் விண்ணப்பம் பண்ண வேண்டும். ஒரு உதாரணத்தை எழுதுகிறேன். கவனித்துப்பாருங்கள். ஒரு குறிப்பிட்ட தூரத்தை கடக்க வேண்டுமானால் நீங்கள் உங்கள் இரண்டு காலால் நடந்துபோய் அந்த தூரத்தைக் கடந்து போகலாம் அல்லது ஒரு காலைத் தூக்கி மடக்கி வைத்துக் கொண்டு ஒற்றைக் காலில் குதித்து குதித்து அந்த தூரத்தைக் கடந்து விடலாம்.



எப்படியும் அந்த தூரத்தை நீங்கள் கடந்து விடுவீர்கள் என்பது உண்மைதான். ஆனால் எது எளிது என்பதை யோசியுங்கள். ஒற்றைக் காலால் கடக்க முடிந்தாலும் உங்களுக்கு சோர்வு அதிகம் உண்டாகிறது அல்லவா ! அதே வேளையில் இரட்டைக்காலால் கடக்கும் போது பிரயாசம் கொஞ்சமே போதும்.

அப்படியே ஜெப வாழ்விற்கு ஆவியில் ஜெபம் - கருத்தான ஜெபம் இரண்டும் இரண்டு கால்கள். இதில் ஒன்றை ஒதுக்கிவிட்டு சிரமப்படுவதை விட சீரான சிறப்பான ஜெபம் செய்ய இரட்டைக் காலால் நடப்பதைப் போல் கொஞ்சநேரம் அந்நிய பாஷையிலும் சொந்தப்பாஷையிலும் ஜெபியுங்கள்

அப்போது உங்களுக்கு ஜெபத்தில் களைப்பு ஏற்படாது மாறாக புது உற்சாகம் பிறக்கும். ஜெபத்தை முடித்து விடலாம் என்ற எண்ணத்தைக் காட்டிலும் இன்னும் ஜெபிக்கலாம் என்ற ஆசை பிறக்கும்.

## <u>5. அற்புதமான போர் ஆயுதம் அந்நியபாஷை.</u>

சாத்தானுக்கு விரோதமாகப் பயன்படுத்த தேவன் தந்த போர் ஆயுதங்களில் அற்புதமானது அந்நியபாஷை. ஆச்சர்ய மாக இருக்கிறதா. வேத வசனத்தை விளக்குகிறேன் கவனித்துப் பாருங்கள்.

முந்தின அதிகாரத்தில் பட்டியல் போட்டுக் காட்டிய மாற்கு 16:17ஆம் வசனத்தை மீண்டும் பட்டியல் போட்டு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கர்த்தரை விசுவாசிப்பவர்களுக்கு தேவன் கொடுத்த ஐந்து விதமான அடையாளங்களை சற்று கவனித்துப் பாருங்கள்.

1. பிசாசுகளைத் துரத்துவார்கள்
2. நவமான பாஷைகளைப் பேசுவார்கள்
3. சர்ப்பங்களை எடுப்பார்கள்
4. வியாதியஸ்தர்களை சுகப்படுத்துவார்கள்

5. சாவுக்கேதுவானவைகளைக் குடித்தாலும் சேதம் அடையார்கள்

இந்த வரங்களின் பொதுத்தன்மையை விளக்குகிறேன் கவனித்துப்பாருங்கள். இரண்டாவது சொல்லப்பட்ட நவமான பாஷைகளைப் பேசுதல் தவிர மற்ற நான்கு வரங்களை சற்று முதலில் கவனிப்போம்.

பிசாசுகளைத் துரத்துவார்கள். இது பிசாசுக்கு எதிரான வரம் மட்டுமல்ல இயற்கையின் சக்திக்கு மேலான வல்லமையாய் இருக்கிறது. அதுபோல சர்ப்பங்களை எடுப்பார்கள் என்ற வரமும் சத்துருவுக்கு எதிரானது. இயற்கைக்கு மேலானதும் கூட.

வியாதிகளை குணமாக்குதல் சாவுக்கேதுவானவைகள் சேதப்படுத்தாது போன்றவையும் சத்துருவுக்கு எதிரானது. எனவே 5இல் 4 வரங்கள் சத்தருவுக்கு எதிரானதே அப்படி யானால் 5ல் 1 ஆனா நவமான பாஷை பேசுதல் குறித்து உங்கள் கருத்து என்ன?

நிச்சயமாக இந்த வரமும் சத்துருவுக்கு எதிரானதே. ஆவியானவர் தேவனின் ஆழங்களை ஆராய்ந்து அறிந்தது மல்ல, சாத்தானின் ஆழங்களை அறிந்திருக்கிறார்.

எனவே அந்நியபாஷையில் பேசும்போது தேவனோடு பேசுவது மாத்திரம் அல்ல, சாத்தானுக்கு எதிராகவும் பேசுகிறீர்கள். நீங்கள் அந்நியபாஷை பேசும்போது சாத்தான் ஆட ஆரம்பிப்பான் ஓடவும் ஆரம்பித்து விடுவான்.

பிசாசு பிடித்தவர், வியாதியஸ்தர் இவர்களுக்கு ஜெபிக்கும் முன்பு சற்று ஆவியில் நிறைந்து அந்நியபாஷையில் பேசி விட்டு நாலுவார்த்தையில் ஜெபித்துப் பாருங்கள், பலனை உடனே பார்க்கலாம்.

## <u>6. ஆழ்நிலை அமைதி தருவது அந்நியபாஷை</u>

பல்வேறு காரியங்களில் உழல்கிற மனித சரீரத்திற்கு இளைப்பாறுதல் அவசியப்படுகிறது போலவே பல்வேறு



காரியங்களை சிந்தித்துக் கொண்டு இருக்கும் மனதுக்கும் ஒரு இளைப்பாறுதல் தேவைப்படுகிறது. அதற்காகவே தூக்கத்தை தேவன் மனிதனுக்கு தருகிறார்.

ஆனால் தூக்கம் கூட சிலருக்குத் துக்கமாகத்தான் இருக்கிறது. சொப்பனங்கள் நினைவுகள் அநேகரை கலக்கிக் கொண்டு இருக்கிறது. தேவ ஜனத்திற்கு அற்புதமான ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார். அவன் அவயவங்கள் எல்லாம் செயல்பட்டுக் கொண்டு இருக்கும் வேளையிலேயே அவன் மனதிற்கு பூரணமான ஓய்வும் அமைதியும் உண்டாக்குகிறார்.

புதிராக இருக்கிறது அல்லவா ! விஞ்ஞான உலகும் கூட புரிந்து கொள்ள முடியாத விந்தை, ஏசாயா 28:11, 12ஆம் வசனங்களை வாசித்துப் பாருங்கள்.

''பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷையினாலும் இந்த ஜனத்தோடு பேசுவார். இதுவே நீங்கள் இளைத்தவரை இணைப்பாறப் பண்ணத்தக்க இளைப்பாறுதல்.''

இந்த வசனத்தின்படி இளைத்துப்போன ஆத்துமா இளைப்பாறதக்க இளைப்பாற்றும் வழி அந்நிய பாஷையில் பேசுதலே என விளங்குகிறதல்லவா.

மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் I கொரியந்தியர் 14:14 இல் அந்நிய பாஷையில் பேசும் போது ஆவி மாத்திரமே விண்ணப்பம் பண்ணுகிறபடியால் எனது கருத்துக்கள் பயனற்றதாய் இருக்கிறது என்று கூறுவதை கவனியுங்கள். அந்நிய பாஷையில் பேசும்போது சிந்தனாசக்திக்குட்பட்ட அனைத்துமே ஓய்வு எடுக்கிறது என்பது மிக ஆச்சர்யமான உண்மை.

அயல்மொழியில் பேசும்போதெல்லாம் ஆழ்நிலை சமாதானம் கிடைப்பதால்தான் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றவர்கள் எப்போதும் மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார்கள்.

இந்த அனுபவத்தையும் பரிசுத்த ஆவியையும் பெறாதவர்கள் இந்த மேலான அனுபவங்களை நம்பாதது மாத்திரம் அல்ல இந்த ஆவியின் அனுபவங்களைக் குறித்து வெகு தீமையாக எழுதுவது மிகுந்த வேதனைக்குரியது.

இது அனுபவத்தில் வருவது பெற்றுக்கொள்ளுங்கள். அநுபவித்துப் பாருங்கள்.

*7. ஆராதிக்க சிறந்தது அயல்மொழியில் பேசும் முறை*

கர்த்தரை பூரணமாக ஆராதிக்க நமக்கு உற்ற வழி வகுப்பது அந்நியபாஷையில் பேசுவதாகும்.

அப்போஸ்தலர் நடபடிகளில் அந்நியபாஷை பேசிய இடங்களை எல்லாம் கவனித்துப் பாருங்கள். ''அவர்கள் பலபாஷையில் பேசி தேவனைப் புகழ்ந்தார்கள்'' (அப் 10:45) என்பதை உங்களால் கண்டுகொள்ள முடியும்.

மொழியின் வரையரையைத் தாண்டி உன்னதமான முறையில் ஒப்பில்லாத தேவனைப் புகழ துதிக்க பன்மொழிக் கலவை அல்லது பற்பலபாஷைகள் நமக்குப் பெரிதும் உதவுகிறது. மகிமையில் வாசம்பண்ணும் நமது தேவனை பரிபூரணமாக அறிந்துள்ள ஆவியானவர் அவரின் சித்தப்படியே பூரணமாக துதிக்க நம்மை அந்நிய பாஷையில் பேசவைக்கிறார்.

இந்த அந்நியபாஷையில் தேவனை வார்த்தைகளால் துதிப்பது மட்டுமல்ல. மற்றும் ஒரு முறை கூட உண்டு. அது அந்நிய பாஷையில் பாடுவது.

''நான் ஆவியோடு விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடு விண்ணப்பம் பண்ணுவேன்'' என்று சொன்ன பவுல் அத்தோடு நின்றுவிடாமல் ''நான் ஆவியோடு பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்'' என்றும் சொல்லியிருப்பதைக் கவனியுங்கள். ( I கொரி 14:15)



ஆவியில் தேவனைப்பாடுவது அற்புதமான கிருபை. நீங்கள் அபிஷேகம் பெற்று அந்நியபாஷையில் பேசும் நபரானால், கர்த்தரிடம் ஆவியில் பாடும் கிருபையைக் கேட்டு ஆவியில் பாடி அவரை மகிமைப்படுத்துங்கள்.

எனக்கு அன்பானவர்களே!

ஆண்டவரின் இரகசியங்களைப் பேச

ஆண்டவரோடுஐக்கியப்பட

பக்திவிருத்தி அடைய

ஆவியில் ஜெபிக்க

சாத்தானை எதிர்க்க

ஆழ்நிலைசமாதானம் பெற

ஆண்டவரைத் துதியால் மகிமைப்படுத்த

நமக்கு அந்நியபாஷையின் வரம் பெரிதும் உதவுகிறது, வழி நடத்துகிறது.

# 5

## ஆவிக்குரிய வரங்கள்

நமது தேவன் தமது வாக்கின்படியே இந்த பூவுலகிற்கு பரிசுத்த ஆவியை தந்தருளினார். அதைப் போலவே பரிசுத்த ஆவியானவரும் சபைக்கு வரங்களை தந்து ஆசீர்வதிக்கிறார்.

தேவனிடத்திலிருந்து நாம் பெறும் கொடைகள், ஈவுகள் யாவற்றையும் வரங்கள் என்று பொதுவாக நாம் அழைத்தாலும், தாம் அபிஷேகம் செய்கிற மக்களுக்கு பரிசுத்த ஆவியானவர் ஒன்பது விதமான சிறப்பான வரங்களை நல்குகிறார்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் எப்படி எல்லா தலைமுறைக்கும் சொந்தமானது என்று கவனித்தோமோ அப்படியே அவர் அருளுகின்ற ஆவிக்குரிய வரங்களும் எல்லா தலைமுறைக்கும் சொந்தமானதே.

இந்த வரங்கள் ஏதோ அப்போஸ்தலருக்கு மாத்திரம் என்றோ அல்லது ஊழியர்களுக்கு மாத்திரம் என்றோ நாம் வாளா இருந்துவிடக் கூடாது. கொரிந்து சபையாரைக் குறித்து பவுல் எழுதும்போது

''அந்தப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவு இல்லாதவர்களாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்'' (1 கொரி 1:7) என்று குறிப்பிடுவதைக் கவனியுங்கள்.



அதாவது கர்த்தரின் வருகைக்குக் காத்திருந்த கொரிந்து சபையார் எல்லா வரங்களையும் பெற்று இருந்தார்கள் என்பதே அதன் பொருள்.

இந்தக் கடைசிக்காலத்தில் கர்த்தரின் வருகைக்காகக் காத்துத் தவிக்கிற சபையானது எத்தனையாய் ஆவிக்குரிய வரங்கள் பெற்று ஜொலிக்க வேண்டும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் சபைக்கு நிருபம் எழுதும் போது ''சகோதரரே ஆவிக்குரிய வரங்களைக் குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை'' என்று (1 கொரிந்தியர் 12:1) அங்கலாய்க்கிறார்.

ஆம் சபையானது அவிக்குரிய வரங்களைப் பற்றி தெளிவாக அறிந்து அதைப் பெற்று பயன்படுத்த வேண்டும் என்பதே தேவனது சித்தம்.

ஆவிக்குரிய வரங்கள் என்பது பொதுவாக எல்லோருக்கும் அள்ளி வீசப்படுகிற ஒன்றல்ல என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் இன்னார் பெற்ற வரம் எனக்கு வேண்டும் என்றோ அல்லது இந்தவரம் இவருக்கு இல்லை என்றோ நாம் நினைக்கக் கூடாது. ஆதங்கப்படக் கூடாது.

பரிசுத்த ஆவியை நமக்கு தேவன் அருளியதற்கு எத்துணை மகிமையான முக்கியத்துவம் உண்டோ அத்துணை முக்கியத்துவம் ஆவியானவர் அருளும் வரத்திற்கும் உண்டு.

நம்மை பொதுவாய் தேவன் அழைத்தாலும், அவர் ஒவ்வொருவரையும் ஒரு நோக்கத்தோடுதான் அழைத்திருக் கிறார் என்பதை நாம் உணர்தல் அவசியம். நம்மை அழைத்த அழைப்பில் நம் ஓட, நமது அழைப்பை நாம் சரியாய் நிறைவேற்ற உதவும் உபகரணங்களாக பரிசுத்த ஆவியானவர் வரங்களை நமக்கு அருளுகிறார்.

இதைத்தான் பவுல் 1 கொரிந்தியர் 12:7 இல் ஆவியின் அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டு இருக்கிறது என்றும் 1 கொரி 12:11 இல் இவைகள் எல்லாம் அந்த **ஒரே ஆவியானவர்** நடப்பித்து தமது சித்தத்தின்படியே அவனவனுக்கு பகிர்ந்து கொடுக்கிறார் என்று எழுதுகிறார்.

நீங்கள் மேலே கண்ட வசனத்தில் ஒரே ஆவியானவர் என்ற வார்த்தை சிந்திக்க வேண்டிய ஒன்று. பல்வேறு வரங்கள் பலவிதங்களில் பல மனிதர் மூலம் கிரியை செய்கிறது. வரம் கிரியை செய்யும்போதும் வரம் பெற்ற மனிதர்களைப் பார்க்கும்போதும் அநேகர் தடம்புரண்டு விடுகின்றனர்.

இந்த வரம் பெற்று இருந்தால் இவர் பெரியவர் என்றும் இந்த வரம் பெற்று இருந்தால் இவர் சற்று சுமாரானவர் என்றும் மதிப்பெண் கொடுத்து கூட்டம் கூடிவிடுகின்றனர்.

இதனால்தான் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தல னாகிய பவுல் மூலம் ஒரே ஆவியானவர் என்ற வார்த்தையை சபைக்கு எழுதி இருக்கிறார். பவுல் இதே அதிகாரத்தில் 4ஆம் வசனத்தில் வரங்களில் வித்தியாசங்கள் உண்டு. ஆவியானவர் ஒருவரே என்று எழுதி இருக்கிறார்.

அபிஷேகம் பெற்ற ஒவ்வொரு தெய்வ பிள்ளைக்கும் அவர்கள் அழைப்புக்கும் தெரிந்து கொள்ளுதலுக்கும் ஏற்ப ஆவியானவர் வரங்களைப் பகிர்ந்து அளிக்கிறார் என்பது சத்தியம்.

நம் ஒவ்வொருவருக்கும் கர்த்தர் வரங்களைக் கொடுத்து இருக்கிறார் - கொடுக்கிறார். ஆனால் நாம்தான் நமது அறியாமை யினாலும் புரிந்து கொள்ளாமையினாலும் வரங்களைப் பயன்படுத்துவதில்லை. வரங்களில் வளர்வதும் இல்லை.

அவனவன் பிரயோஜனத்திற்கு வரங்களை பகிர்ந் தளிக்கிற ஆவியானவர் உங்கள் வாழ்க்கைக்கு - உங்கள்



ஊழியத்திற்கு தேவையான வரங்களை அபிஷேகிக்கும் போதே கொடுத்துவிட்டார் என்பதை அறிந்துகொள்ளுங்கள். விசுவாசியுங்கள்.

இஸ்ரவேலர் வனாந்தர வாழ்க்கையில் ஒரு அற்புதம் நிகழ்ந்தது. அவர்கள் அப்பம் கேட்டு மோசேக்கு விரோதரமாக முறுமுறுத்தார்கள். அங்கே தேவன் அவர்களுக்கு செவி கொடுத்து அன்று இரவே மன்னாவை வானத்திலிருந்து பொழிந்தார். ஆனால் காலையில் பனி அதை மூடியிருந்த படியால் அவர்கள் அதை அறியவில்லை.

பனி விலகியது பார்வைக்கு மன்னா தெரிந்தது. ஆனால் இஸ்ரவேல் புத்திரர் அதைக்கண்டு அது இன்னது என்று அறியாதிருந்து ஒருவரைப் பார்த்து ஒருவர் ‘இது என்னது’ என்று (யாத் 16:14, 15) கேட்டார்கள்.

இன்றும் அப்படித்தான் தேவஜனம் பயன்படுத்த, பலப்பட, தேவன் உன்னதமான வரங்களை சபைக்கு அருளியுள்ளார். சிலருக்கு கண்ணுக்குத் தெரிவதில்லை - சிலருக்கு புத்திக்கும் எட்டுவதில்லை.

உங்களுக்காக தேவன் வரங்களைக் கட்டளை யிட்டுள்ளார். அதை நீங்கள் பயன்படுத்த வேண்டிய விதத்தில் பயன்படுத்த வேண்டும்.

மோசே மன்னாவைக் குறித்து விளக்குகிறான். அதன்பின் அவித்து, சுட்டு, அப்படியே என பலவிதமாக அவர்கள் மன்னாவை அநுபவித்தார்கள்.

தெரியாதவரை பயன்படுத்தவில்லை தெரிந்த பிறகோ விதவிதமாக தேவைக்கேற்ப அவர்கள் பயன்படுத்தினார்கள். அதைப்போலவே ஆவிக்குரிய வரங்கள் உங்களிடத்தில் இருந்தும் ‘இது என்னது’ என்று கேட்கும் அளவில் நீங்கள் இருந்தாலும் இந்த அதிகாரத்தில் ஆவிக்குரிய வரங்களை விவரமாக அறிந்து கொண்டு உங்கள் தேவைக்கு ஏற்ப

கர்த்தரின் மகிமையான வரங்களைப் பயன்படுத்தப் போகிறீர்கள் என்பது உண்மை.

ஆண்டவரிடமிருந்து அற்புதமான சத்தியங்களைப் பெற்று ஆதித்திருச்சபைக்கு உபதேசங்களைக் கற்றுத் தந்த அப்போஸ்தலனாகிய பவுல் ஆவிக்குரிய வரங்களை விளக்க ஒரு முழு அதிகாரத்தையும் (1 கொரிந்தியர் 12) பயன்படுத்தி இருப்பது மிக முக்கியமானது.

இந்த அதிகாரத்தில் ஒன்பது விதமான வரங்களைக் குறித்து சொல்லப்பட்டு இருக்கிறது. இவை ஒன்பதாக சொல்லப்பட்டு இருந்தாலும் ஒரு வரத்திற்கும் மற்றொரு வரத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு.

வானவில்லில் ஏழு நிறங்கள் இருந்தாலும் அவைகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து இருப்பது போல ஆவிக்குரிய வரங்கள் ஒன்பதாக இருந்தாலும் அவைகள் ஒன்றுடன் ஒன்று இசைந்தே இருக்கிறது.

அநேகமாக ஒருவரம் கிரியை செய்கிற வேளையில் அதற்கு உதவியாக மற்றொரு வரம் கிரியை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. இதை பின்னர் விளக்குகிறேன்.

பொதுவான இந்த ஒன்பது வரங்களையும், அவைகளின் தன்மை மற்றும் செயல்படும் விதம் இவைகளை வைத்து மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். இப்போது ஒன்பது வரங்களையும் மூன்று பெரும் பிரிவாகப் பிரித்து அட்டவணைப்படுத்த விரும்புகிறேன்.

## ஆவிக்குரிய வரங்கள்

(1 கொரிந்தியர் 12:8-10)

| | |
|---|---|
| A. வெளிப்பாட்டு வரங்கள் (REVELATION GIFTS) | 1. ஞானத்தைப் போதிக்கும் வசனம் |
| | 2. அறிவை உணர்த்தும் வசனம் |
| | 3. ஆவிகளைப் பகுத்தறிதல் |
| B. செயல்பாட்டு வரங்கள் (ACTION GIFTS) | 1. குணமாக்கும் வரங்கள் |
| | 2. அற்புதம் செய்யும் சக்தி |
| | 3. விசுவாசம் |
| C. பேசும் வரங்கள் (UTTERANCE GIFTS) | 1. தீர்க்க தரிசனம் |
| | 2. பற்பல பாஷை பேசுதல் |
| | 3. பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல் |



இப்பொழுது இவைகளை ஒவ்வொரு பிரிவாக உங்களுக்கு விளக்க விரும்புகிறேன். நீங்கள் புரிந்துகொள்ள எளிதாக இருக்கும் பொருட்டு பேசும் வரங்கள் - செயல்பாட்டு வரங்கள் - வெளிப்பாட்டு வரங்கள் என்று வரிசையாக விளக்க விரும்புகிறேன்.

## A. பேசும் வரங்கள்

இந்தப் பிரிவில் உள்ள வரங்கள் மூலம் தேவனுக்காக மக்களிடம் பேசுகிறோம்.

### 1. தீர்க்க தரிசனம்

தீர்க்கதரிசனம் என்பது பொதுவாக வருங்காரியங்களை அறிவிப்பது. கர்த்தர் இந்த வரத்தை சொற்பமானவர்களுக்கே கொடுக்கிறார். இவ்வரத்தைப் பெற்றவர்கள் ஆவியில் நிறைந்து காணப்படும்போது ஆவியானவரின் உதவியால் தீர்க்க தரிசனம் சொல்லுவார்கள். இவர்கள் கூறும் தீர்க்க தரிசனம் தனிநபர், சபை, ஊழியம், தேசத்தின் நிலை எதைப்பற்றியும் இருக்கலாம். இந்த வரம் தேவனுடைய சபைக்கு மிகவும் அவசியமானது.

சில வேளைகளில் சபையின் ஊழியருக்கு அருளப்பட்டு இருக்கலாம். அல்லாவிட்டால் சபையில் வேறு நபருக்கு அருளப்பட்டு இருக்கலாம். அப்படிப்பட்டவரை சபையில் தீர்க்க தரிசனம் உரைக்க அனுமதிப்பது நியாயமானதே.

சபை கூடி வரும்போது சொல்லப்படுகிற தீர்க்க தரிசனங்கள், தனி மனிதருக்கும் முழுசபைக்கும் பக்தி விருத்தி உண்டாக ஏதுவாக இருப்பதோடு அல்லாமல் ஜனங்களுக்குப் புத்தியும் ஆறுதலும் உண்டாக உரைக்கிறார்கள் என்று பவுல் கூறுகிறார் (1 கொரி 14:3, 4).

எனவேதான் பவுல் தனது நிருபத்தில், தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்களாக வேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன் என்றும் (1 கொரி 14:5) தீர்க்கதரிசனம் சொல்ல நாடுங்கள் என்றும் (1 கொரி 14:39) அறிவுறுத்தி எழுதுகிறார்.

இவ்வரத்தைப் பெற்றவர்களுக்கும் பெற விரும்புகிறவர் களுக்கும் சில ஆலோசனைகள் சொல்ல வேண்டியது மிகவும் அவசியம். இந்த வரம் உங்களில் அதிகமாகக் கிரியை செய்ய வேண்டுமாயின் நீங்கள் மனிதர்களிடம் பேசுவதைக் குறைத்து விட்டு ஆண்டவரோடு பேசும் நேரத்தைக் கூட்டி விடுங்கள்.

அதுமாத்திரமல்ல நீங்கள் ஆண்டவருக்கு வாயாக செயல்படுகிறீர்கள். அதாவது பரிசுத்த ஆவியானவர் உங்கள் வாயின்மூலம் தேவஜனத்தோடு பேசுகிறார். அப்படியானால் சாதாரண வேளைகளிலும் உங்கள் வாயின் வார்த்தை மிக கவனமான இருக்க வேண்டும்.

ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து நல்ல தண்ணீரும் கெட்ட தண்ணீரும் சுரக்க முடியாது என்று வேதம் சொல்லுகிறது. அதுபோலவே ஒரே வாயிலிருந்து உலகப்பிரகாரமான வசனிப்புகளும் தீர்க்க தரிசனங்களும் வர இயலாது. எனவே உங்கள் வாயை தேவனுக்கு பிரதிஷ்டை செய்யுங்கள்.

## 2. பற்பல பாஷைகளைப் பேசுதல்

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை நாம் பெறும்போது அந்நிய பாஷையில் பேசுகிறோம் என்பது உண்மை. ஆனால்



அந்த பாஷைகள் நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று உள்ளோம் என்பதற்கு அடையாளமாக மாத்திரமே இருக்கிறது.

ஆனால் ஆவியின் வரங்களில் ஒன்றாகிய பற்பல பாஷைகள் பேசுதல் சற்று வித்தியாசமானது. இந்த வரத்தைப் பெற்ற நபர் தொடர்ச்சியாக தான் அறியாத மொழியில் பேசுவது, துதிப்பது மாத்திரமல்ல சில வேளைகளில் அதே பாஷையில் தீர்க்க தரிசனம் மற்றும் சபைக்குரிய தேவ செய்தியும் உரைப்பார்.

இங்குதான் பவுல் சொன்னது நியாயமாகப் படுகிறது. அந்நியபாஷையில் தீர்க்க தரிசனம் உரைத்தால் யாருக்குப் புரியும். எனவே இவ்வகைப் பேச்சுகளைப் பேசுகிறவர்கள் அஃதிணை மற்றவர்கள் புரிந்துகொள்ளும்படி அர்த்தம் சொல்லுதல் வேண்டும்.

## 3. பாஷைகளை வியாக்கியானம் சொல்லுதல்

பற்பல பாஷையில் பேசும் வரத்தை சபைக்கு அளித்துள்ள ஆண்டவர் அது மிகச் சரியான விதத்தில் சபைக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காக அந்த அந்நிய பாஷைக்கு அர்த்தம் சொல்லும் வரத்தை சபைக்குத் தந்துள்ளார்.

ஒரு சிலருக்கு பாஷை பேசும் வரத்துடன் அதற்கு அர்த்தம் சொல்லும் வரத்தையும் சேர்த்துக் கொடுத்துள்ளார். சிலருக்கு பற்பல பாஷை பேசவும் சிலருக்கு அதனை வியாக்கியானம் செய்யவும் தனித்தனியே ஆவியானவர் வரங்கள் தந்துள்ளார்.

இந்த வரம் பெற்றவர்கள் ஆவியில் நிறைந்து இருக்கும் போது கூடி வந்தவர்களில் எவரேனும் அந்நிய பாஷையில் சபைக்காக பேசினால் அதனை ஆவியானவரின் ஏவுதலினால் மொழிபெயர்த்து சபைக்கு அர்த்தம் சொல்லுவார்கள்.

**B.** செயல்பாட்டு வரங்கள்

இவ்வகை வரங்களினால் நாம் கர்த்தரின் ஸ்தானாதி பதிகளாய் இருந்து மக்களிடத்தில் அவரது வல்லமை விளங்கும்படியாய் கிரியை செய்கிறோம்.

1. குணமாக்கும் வரங்கள்

வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்று பொதுவாக எல்லா விசுவாசிகளுக்கும் தேவன் அதிகாரம் கொடுத்திருந் தாலும் ஒரு சிலருக்கு வியாதிகளை குணமாக்கும் வரங்களை பரிசுத்த ஆவியானவர் கொடுக்கிறார்.

இவ்வரங்களைப் பெற்றவர்கள் வியாதியஸ்தர்களைத் தொட்டு ஜெபிக்கும் பொழுது அவர்கள் சுகத்தைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். குறிப்பாக ஆத்தும ஆதாயம் செய்யும் விசுவாசிகளுக்கும், சுவிசேஷ ஊழியம் செய்யும் ஊழியர்களுக்கும், தேவன் இந்த வரத்தை தாராளமாக அளித்திருக்கிறார்.

மற்ற எல்லா வரத்தைக் காட்டிலும் இந்த குணமாக்கு தலின் வரம் சற்று வித்தியாசமான முறையில் தேவனுடைய பிள்ளைகளுக்கு பரிசுத்த ஆவியானவரால் வழங்கப்படுகிறது. நேரமிருந்தால் வரங்களைக் குறித்து சொல்லப்பட்ட வசனங்களை (1 கொரிந்தியர் 12:8 முதல் 10) வாசித்துப் பாருங்கள். எல்லா வரங்களும் ஒருமையில் சொல்லப் பட்டிருக்க குணமாக்கும் வரங்கள் என்று பன்மையில் சொல்லப்பட்டிருப்பதைக் கவனித்துப் பாருங்கள்.

குணமாக்கும் வரங்களிலே பல பிரிவுகள் இருப்பதை புரிந்து கொண்டிருப்பீர்களென்று நம்புகிறேன். உலகப் பிரகாரமான வைத்தியர்களில் குறிப்பிட்ட வியாதிகளுக்கு சிறப்பு மருத்துவர் (Specialist) இருப்பது போலவே



குறிப்பிட்ட வியாதிகளை குணமாக்கக்கூடிய வரங்களை தனித்தனியே தேவன் பகிர்ந்தளிக்கிறார். இதனால்தான் ஒரு சில குணமாக்கும் வரம் பெற்றவர்கள் ஜெபிக்கும் பொழுது குறிப்பிட்ட சில வியாதிகளுக்கு மட்டும் சுகம் கிடைக்கிறது.

தேவன் தமது அனந்த ஞானத்தின்படி தான் இந்த குணமாக்கும் வரத்தை இப்படிப் பிரித்துப் பலருக்கு வழங்குகிறார். அல்லாவிட்டால் சர்வரோக நிவாரணியாக சில ஊழியர்கள் மாறி விடுவார்.

2. அற்புதங்கள் செய்யும் சக்தி

குணமாக்கும் வரங்களைப் போலவே தேவனுடைய மகத்துவமான வல்லமையை வெளிப்படுத்துவது அற்புதங்களை செய்யும் சக்தி. இந்த வரம் பெற்றவர்கள் கண் எதிரேயே கால அவகாசம் தேவையில்லாமல் இயற்கைக்கு மேலான காரியங்களை பரிசுத்த ஆவியானவரின் பெலத்தால் செய்துவிடுவார்கள்.

இங்கே நீங்கள் அற்புதத்திற்கும் குணமாக்குதலுக்கும் உள்ள வித்தியாசத்தை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு நோயாளி, குணமாக்கும் வரம், அற்புதங்களைச் செய்யும் சக்தி இவை இரண்டாலும் சுகத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் அது எந்த வரத்தால் குணமாக்கப்பட்டது என்பதை நீங்கள் சுலபமாகக் கண்டறியலாம்.

முன்னே நீங்கள் கண்டபடி ஒருவருடைய வியாதி கால அவகாசமின்றி கண் எதிரே தீர்க்கப்படுமானால் அது அற்புதம் செய்யும் சக்தியால் நிகழ்ந்தது. ஒரு சிலருக்கு ஜெபித்தபின் அடுத்தமணி நேரத்திலோ அடுத்த நாளோ படிப்படியான பூரண சுகம் உண்டாகுமானால் அது குணமாக்கும் வரத்தினால் உண்டானது.

அற்புதம் செய்யும் சக்தியினால் பிசாசு பிடித்தவர் களையும் அந்தகாரத்தினால் கட்டப்பட்டவர்களையும் உடனடியாக விடுதலையாக்க முடியும்.

ஆயிரம் பிரசங்கங்களைப் பார்க்கிலும் ஒரு அற்புதம் மிகுந்த பலனுள்ளது என்ற சொல் வழக்குக்கு ஏற்ப தேவனுடைய கிரியையை பிரத்தியட்சமாய் வெளிப்படுத்தக் கூடிய இந்த அற்புதம் செய்யும் சக்தியை நாம் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

அநேக ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிறிய கிராமத்தில் நாங்கள் குழுவாக சுவிசேஷ ஊழியம் செய்யச் சென்றிருந் தோம். அன்று மாலைக் கூட்டத்தில் நாங்கள் எதிர்பார்த்த அளவு கூட்டம் வரவில்லை. எனினும் நான் செய்தி கொடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. செய்திக்கு எழுந்து நின்ற நான் பாடிக்கொண்டிருந்த குழுவோடு பாடிக்கொண்டிருந்த பொழுது ஒரு சம்பவம் நடந்தது.

ஒரு பெரிய கூப்பாட்டுடன் வாட்ட சாட்டமான ஒரு பெண் எங்கோ இருந்து எங்கள் மேடையை நோக்கி ஓடி வந்தாள். அவளுக்குப் பின் நான்கைந்து பேர் அவளை அடக்கக் கூடாமல் பின்னாக ஓடி வந்தார்கள்.

அப்படியே அவளை விட்டால் மேடை தூளாகி விடும். யோசிக்க நேரமில்லை. குழுவினரோ கண்ணை மூடிக்கொண்டு பாதி பரவசத்தில் பாடிக்கொண்டிருக்கிறார்கள்.

கல்லும் மண்ணும் எம் கடவுளல்ல

கையின் சித்திரம் தெய்வமல்ல

ஆவியோடும் உண்மையோடும்

ஆதி தேவனை வணங்கிடுவோம்

என்று அவர்கள் ஆவியில் பாட, மேடைக்கு முன்னால் அந்த தேவி ஆட, ஆவியின் வைராக்கியத்தால் நான் அவளை நோக்கி ஓட, என் கைகள் அவள் தலையின் மேல் பட்டதும் தடாலென்று நெடுஞ்சாண் கிடையாய் விழுந்தாள்.

நடந்தது என்ன தெரியுமா? எங்கள் கூட்டத்தில் பாடப்பட்ட பாடல்களை ஒலிபெருக்கி மூலம் கேட்ட இவளும்



இவள் பின்னே வந்தவர்களும் வீட்டில் அமர்ந்து கொண்டு இயேசுகிறிஸ்துவைக் குறித்து பரியாசமாய் பேசி இயேசுவானவர் கடவுளென்றால் இவளை ஏழு ஆண்டாகப் பிடித்திருக்கிற பிசாசு இன்றைக்குப் போக வேண்டும் என்று பேசி இருக்கிறார்கள்.

அவ்வளவுதான் கர்த்தருடைய பார்வை அவள் மேல் பட்டுவிட்டது. அந்த ஆவி அவளை அலைக்கழித்ததினால் வீட்டிலிருந்து வீதியில் நடக்கும் கூட்டத்திற்கு ஓடி வந்துவிட்டாள்.

விழுந்து கிடந்த அவளை எழுந்திருக்க வைத்து ஜெபித்தோம். ஏழு ஆண்டுகளாய் அவளை பிடித்தது மாத்திரமல்ல, அவள் கர்ப்பந்தரிக்கக் கூடாதபடி அவளைக் கட்டி வைத்த மயில் வாகனம் என்று சொல்லிக்கொண்ட அந்த அசுத்த ஆவி அப்போதே அவளை விட்டுப் போய்விட்டது.

அதனைக் கண்ட, கேட்ட மக்கள் சில மணித்துளிகளில் நோக்கும் திசையெல்லாம் கூடிவிட்டார்கள். எங்களுடைய பாடல்களோ, எங்களுடைய சாட்சிகளோ அந்த ஊரில் கூட்டத்தை கூட்டவில்லை. மாறாக ஒரு பெண்ணுக்குள் நடைபெற்ற அற்புதம் மிகத் திரளைக் கூட்டிவிட்டது. எனவே வெகுஜன சுவிசேஷ ஊழியம் செய்பவர்களுக்கு அற்புதம் செய்யும் சக்தியும், தனித்தாள் சுவிசேஷ ஊழியம் செய்பவர்களுக்கு குணமாக்கும் வரமும் மிகவும் அவசியம். கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்.

விழிகள் திறப்பதும் செவிகள் கேட்பதும், குறைவான அவயங்கள் நிறைவான வளர்ச்சி பெறுவதும் ‘அற்புதங்கள் செய்யும் சக்தி வரத்தினாலேயே 12 ஆண்டு கால பெரும்பாடு உடனே நின்றதும் 18 வருட கூன் உடனே நிமிர்ந்ததும் 38 ஆண்டு கால திமிர்வாதம் திடீரென மறைந்ததும் குணமாகும் வகையைச் சார்ந்ததல்ல. அற்புதங்களை செய்யும் சக்தியால் உண்டானவைகளே.

இந்த அற்புதங்கள் செய்யும் வரத்தைப் பெற்றவர்களும் வரத்தினால் விடுதலையை எதிர்பார்ப்பவர்களும் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். மோசே அன்று பார்வோனுக்கு முன்பாக அற்புதங்கள் செய்தபோது எகிப்தின் மந்திரவாதிகளும் அதற்கு ஒப்பான அற்புதங்களை செய்தார்கள் என்பதை சிந்தையில் கொள்ளல் வேண்டும்.

சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டு தன்னால் கூடுமானவரை தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிப்பான் என்றும், இந்தக் கடைசி நாட்களில் வஞ்சிக்கிற ஆவி பலமாய் எழும்பி அநேக அற்புதங்களை செய்து மக்களை வழி விலகச் செய்கிறார்கள் என்பதையும் நினைவில் வைத்து கவனமாய் இருத்தல் வேண்டும்.

அதே வேளையில் அற்புதங்களெல்லாம் அபத்தம் என்றோ, அவசியம் இல்லாத ஒன்று என்றோ அசுத்த ஆவியின் கிரியைகள் என்றோ தள்ளி விடக்கூடாது. நமது இரட்சகர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார். எனவே அவர் இன்றும் அற்புதங்களை நிகழ்த்துவார் மாத்திரமல்ல என்னை விசுவாசிக்கிறவன் என்னைவிட பெரிய காரியங்களை செய்வான் என்று இயேசு சொன்னபடியே தம்மை விசுவாசிக்கிறவர்களைக் கொண்டு இன்றும் அற்புதங்களை செய்கிறார்.

ஆதாயமற்ற நோக்குடன் கிறிஸ்துவின் நாமத்தை முன் நிறுத்தி மனதுருக்கத்துடன் அற்புதங்களை நிகழ்த்தி அதனால் கிறிஸ்துவுக்கு மகிமையுண்டாக்குகிற எந்த மனிதனும் அற்புதம் செய்யும் சக்தியைப் பெற்ற தேவ மனிதனாவார்.

இயேசுவின் நாமத்தை மாத்திரம் சொல்லிக்கொண்டு அநித்தியமான ஆதாயத்திற்காக அற்புதங்களை நிகழ்த்தி சுயபிரஸ்தாபத்தை தனக்கு உண்டாக்கிக் கொள்ளுகிற எந்த



மனுஷனைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள். உங்களுக்கு இந்த வரம் இருக்குமாயின் எள்ளளவும், எள்ளின் மூக்களவும், சுயமகிமையைத் தேடாதபடி கவனமாயிருங்கள்.

## 3. விசுவாசம்

பொதுவாக நம் எல்லோருக்கும் விசுவாசம் உண்டு. பிசாசுகளும் தேவன் ஒருவர் உண்டு என்று விசுவாசித்து, நடுங்குகிறது என்று, வேதம் சொல்லுகிறது. இரட்சிப்பு உண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும் என்றும் வேதம் சொல்கிறது. விசுவாசங்கள் பலவிதம். ஆனால் இங்கே சொல்லப்பட்ட வரமாகிய விசுவாசமோ தனி விதம்.

இது இருதயத்திலிருந்து உண்டாகி விண்ணை நோக்குவதல்ல. இது விண்ணிலிருந்து இருதயத்தில் இறங்கி மண்ணை நோக்கி செயல்படுவது. இந்த விசுவாச வரத்தைப் பெற்றவர்கள் நிலைகுலையா மனிதர்கள். நம்பப்படாதவைகள் மேல் உறுதியுள்ளவர்களாய், காணப்படாதவைகளின் மேல் நிச்சயமுள்ளவர்களாய் எந்நிலையிலும் பதறாதவர்களாய் இருப்பர்.

இந்த செயல்பாட்டு வரங்களாகிய முன்னே நாம் கண்ட குணமாக்கும் வரம் அற்புதங்கள் செய்யும் சக்தி ஆகிய வற்றைக் கொண்டு செய்யக்கூடிய காரியங்களை இந்த விசுவாச வரத்தைக் கொண்டும் செய்துவிட முடியும்.

முன்னே நான் எழுதினதை மீண்டும் ஞாபகப்படுத்தி இன்னொரு காரியத்தை கூடுதலாக சொல்ல விரும்புகிறேன்.

ஒரு காரியம் உடனே நடந்தால் அது அற்புதம் செய்யும் சக்தியால் வந்தது. ஒரு வியாதியஸ்தர் படிப்படியாக சுகம் பெற்று பூரணமடைந்தால் அது குணமாக்கும் வரத்தால் வந்தது. ஆனால் இந்த விசுவாச வரம் சற்று வித்தியாசமானது. அதற்குக் கால வரம்பு கிடையாது. அது நடக்கும் அது

நடந்தே தீரும். ஆனால் எப்போது என்று தெரியாது எப்படி நடக்கும் என்று தெரியாது.

இந்த செயல்பாட்டு வரங்களில் முந்தின இரண்டு வரங்கள் சுவிஷேச ஊழியர்களுக்கும், தனித்தாள் ஊழியம் செய்யும் விசுவாசிகளுக்கும் அவசியம் என்று எழுதி யிருந்தேன். இந்த விசுவாச வரம் சபை நடத்தும் போதகர் களுக்கு மிகவும் அவசியம். இந்த வரம் ஒரு போதகருக்கு இருந்தால்தான் ஆட்களே இல்லாத இடத்தில் அமைதலாக இருந்து சபை கட்ட முடியும். காணிக்கையே வராத இடத்தில் கர்த்தரின் முகத்தைப் பார்த்துக் காரியங்களைச் சாதித்துக் கொள்ள முடியும். தன்னுடைய மந்தையிலிருக்கும் ஆடு களுக்கு ஏற்படும் வியாதிகள், பிரச்சனைகள் இவைகளுக்கு இந்த ஒரே வரத்தைப் பயன்படுத்தி விடுதலையைப் பெற்றுத் தர முடியும்.

எபிரெயர் நிருபத்தை வாசித்துப் பார்த்தால் விசுவாச வீரர்களின் பட்டியல் என்று ஒரு சில பரிசுத்தவான்களின் பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கும். அந்தப் பட்டியலின் பெயரை சரியாகக் கவனித்துப் பார்த்தால் சாலமோன் ராஜாவின் பெயரை உங்களால் காண முடியாது.

இதிலிருந்து என்ன தெரிகிறது? ஞானத்தைப் பெற்றிருக்கலாம். ஆலயத்தை கட்டியிருக்கலாம். அவைகள் ஒரு மனிதனை விசுவாச வீரனாக்காது. தேசமே பஞ்சத்தி லிருந்தாலும் காகமே கூட போஷிக்கும் என்று கேரீத்கரையில் அமர்ந்திருந்த எலியாவின் செயலுக்கு அடிப்படை விசுவாசம். சிங்காசனமே விரோதமாய் எழும்பினாலும் சிங்கங்கள் என்னைப் பட்சிக்காது என்று தானியேல் இருந்ததற்கு அடிப்படைக் காரணம் இந்த விசுவாசமே.

காணாத ஒரு இடத்தைக் கானான் என்று நம்பிப் போனானே ஆபிரகாம் அதற்கு அடிப்படை இந்த விசுவாசம்.



எனவே இயற்கைக்கு ஒட்டி நடைபெறும் செயல்களையல்ல, இயற்கைக்கும், நம்பிக்கைக்கும் அப்பாற்பட்ட காரியங்களை எதிர்பார்த்து தேவனை நோக்குவது மாத்திரமல்ல, தேவனுக்காக கிரியை செய்வதே விசுவாசம்.

முன்னே சொன்னதை மீண்டும் இங்கே சொல்லுகிறேன். இது பரத்திலிருந்து அருளப்பட்டாலொழிய ஒருவருக்கு இந்த விசுவாசம் கிட்டாது. அப்படியிருப்பதாக சிலர் சொல்லிக் கொள்ளலாம். அது வறட்டு விசுவாசம். கடைசி நேரத்தில் ஆம்புலன்சைக் கூப்பிடச் சொல்லும், கடன் வாங்க வட்டிக் கடைக்கு வழி கேட்கும். ஆனால் பரத்திலிருந்து வந்த விசுவாசமோ, விடுவிப்பார். விடுவிக்காமற் போனாலும் அவரை மறுதலிக்க மாட்டோம் என்று சொல்லி விழி பிதுங்காமல் மற்றோர் மேல் பழி போடாமல் தேவனுக்காய் காத்திருக்கும். இந்த வரத்தைக் கேளுங்கள் இந்த நன்மையான ஈவை உங்கள் பரமபிதா உங்களுக்காய் அருளுவது அதிக நிச்சயமல்லவா.

## C. வெளிப்பாட்டு வரங்கள் :

பரிசுத்த ஆவியானவர் அருளும் வரங்களில் சில நேரடியாக தேவ வல்லமையை வெளிப்படுத்தும்படி செயல் வடிவில் வெளிப்படுகின்றன. சில தேவ வல்லமையை வெளிப்படுத்தும்படி வார்த்தைகளாக வெளிப்படுகின்றன. சில வரங்கள் செயல்களாகவோ பேச்சாகவோ வெளிப் படாமல் வெறும் சிந்தையில் மாத்திரம் தேவ சமூகத்துக்கு அடுத்தவைகளை வெளிப்படுத்துகின்றன.

இவ்வகை வரங்களை வெளிப்பாட்டு வரங்கள் என்று அழைக்கலாம். இவ்வகையான வரங்களைப் பெற்றவர் களுக்கு, பரிசுத்த ஆவியானவர் இயற்கைக்கு மேலான வழியில் ஞானத்தையும் தேவ சித்தத்தையும் சமயோசிதமாக செயல்பட தேவையான ஆலோசனையையும் வழங்குகிறார்.

மற்ற இரண்டு வகைப் பிரிவைச் சேர்ந்த வரங்களை வகையாகப் பயன்படுத்த இந்த வெளிப்பாட்டு வரங்கள் மிகவும் உதவுகிறது.

1. ஞானத்தைப் போதிக்கும் வசனம் :

இயற்கைக்கும் மனித ஞானத்திற்கும் மேலான தேவ ஞானத்தை பரிசுத்த ஆவியானவர் மனிதருக்கு இந்த வரத்தின் மூலம் அருளுகிறார்.

எந்தப் புத்தகமும், கல்வியும் அருளாத விசேஷதித்த ஞானத்தை அருளி சமயோசிதமாக நடக்க தேவன் பரத்தின் ஞானத்தை அருளுவது எத்தனை பாக்கியம் எண்ணிப் பாருங்கள் !

சாலமோன் இராஜா ஆண்டவரிடத்தில் ஞானத்தைக் கேட்ட போது தேவன் பரமஞானத்தை அவருக்கு அளித்தார். அதினால் அவன் கீர்த்தி எங்கும் பரவிற்று. அவன் ஜனங்களை நீதியாய் மாத்திரமல்ல ஞானமாகவும் நியாயந்தீர்த்தான். அவனது ஞானத்தை சகல மக்களும் ராஜஸ்திரீகளும் கண்டு புகழ்ந்தார்கள்.

ஒன்பது வரங்களும் ஒருங்கே நமது இரட்சகராகிய இயேசுவினிடத்தில் கிரியை செய்தது. அவரை கேள்வி கேட்டு, அவர் சொல்லும் பதிலை வைத்து, அவரைக் கண்ணியில் சிக்க வைக்க நினைத்தவர்கள் வெட்கப்படும் அளவிற்கு மனுஷ குமாரனாகிய இயேசுவினிடத்தில் ஞானத்தைப் போதிக்கும் வசனம் கிரியை செய்தது.

வெள்ளிப்பணத்தின் மேல் உள்ள உருவத்தைக் காட்டி இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்று இயேசு சொன்னதும், தாவீதுக்கு மேசியா குமாரனாக இருக்க அவன் அவரை என் ஆண்டவர் என்று கூறியது எப்படி என்று இயேசு கேட்டு எதிரிகளை வாயடைத்ததும் இந்த ஞானத்தை போதிக்கும் வசனம் என்கிற வரத்தினாலேயே.



அப்போஸ்தலனாகிய பவுல் அத்தேனே பட்டணத்திற்கு அழைத்துக் கொண்டு வரப்பட்ட போது ''அறியப்படாத தேவனுக்கு'' (அப் 17:23) என எழுதப்பட்ட வாசகத்தை மாத்திரம் அடிப்படையாக வைத்துக்கொண்டு பிரசங்கித்து - மக்களை திசை திருப்பி வசப்படுத்தி, மார்ஸ்மேடையின் நியாயாதிபதிகளில் ஒருவனாகிய தியொனீசியு என்பவனையும் தாமரி என்பவளையும் விசுவாசத்துக்குள் வரவைத்தது பவுலுக்குள் இருந்த ஞானத்தைப் போதிக்கும் வசனமாகிய வரமே.

ஆவிக்குரிய தலைவர்களுக்கும் குறிப்பாக சபை நடத்தும் மேய்ப்பர்களுக்கும் இந்த வரம் மிகவும் அவசியம் இருக்க வேண்டும். மந்தையை மேய்க்க, மந்தையை ஏய்க்கும் மக்களிடமிருந்து ஆடுகளை போதகத்தால் காக்க, வேத வசனங்களை பகுத்து வகுத்து போதிக்க இந்த வரம் மிகவும் பெரிதும் உதவியாக இருக்கிறது.

மிகச் சாதாரணமான வேதபகுதியில் இருந்து ஆழமான சத்தியங்களையும், மிகக் கருகலான வேத பகுதிகளில் இருந்து மிகச் சாதாரணமான விளக்கங்களையும் அளிக்கும் போதகர் களை ஆண்டுகொண்டு இருப்பது இந்த ஞானத்தைப் போதிக்கும் வசனமே.

2. அறிவை உணர்த்தும் வசனம்

ஏற்ற சமயத்தில் தேவையான இயற்கைக்கு மேம்பட்ட பரத்தின் ஞானத்தைப் போதிக்கும் வசனம் எப்படி நமக்குத் தருகிறதோ அப்படியே இந்த உலகத்தின் காரியங்களை அறிவுடன் நாம் சந்திக்க நூலாலும் ஆளாலும் தரமுடியாத விதத்தில் பரிசுத்த ஆவியானவர் தமது ஜனத்திற்கு போதுமான அறிவை ''இந்த அறிவை உணர்த்தும் வசனமாகிய'' வரத்தின் மூலம் அளிக்கிறார்.

இவ்வுலகத்தில் கல்விமான்களும் ஏடுகள் பல படித்த அறிவாளிகளும் உண்டு. அவர்களின் மத்தியில் தமது ஜனம்

பேதைகளாய் நின்று வெட்கப்பட்டுப் போகாமல் அறிவில் அவர்களுக்கு நிகராய் நிற்க தேவன் தேவையான விஷய ஞானத்தை அருளுகிறார்.

மீன்பிடி துறையில் இருந்து வந்த போதும் பிரதான அப்போஸ்தலனாக நின்று பிரசங்கித்ததும் பிரச்சனைகளை சந்தித்ததும் இந்த வரத்தினாலேயே.

ஒரு குறிப்பிட்ட காரியத்தை எப்படி தீர்ப்பது எப்படி சமாளிப்பது என்று திகைக்கிற வேளையில் பரிசுத்த ஆவியானவர் இந்த வரத்தின் மூலம் தேவையான அறிவுப் பூர்வமான ஆலோசனையை நமது சிந்தையில் வெளிப்படுத்தி செயல்பட வைக்கிறார்.

ஒரு சில மனிதர்களைக் குறித்த பழையகால சங்கதி களையும் நிகழ்காலத்தில் அவர்களது பிரச்சினைகளையும் அவர்கள் சொல்லாமலேயே ஆவியின் துணையோடு அறிந்து அவர்களுக்காக ஜெபிக்க, ஆலோசனை வழங்க இந்த அறிவை உணர்த்தும் வசனம் பெரிதும் உதவுகிறது.

சில சமயங்களில் இது எந்த வரத்தின் கிரியை என்று சிலரால் புரிந்துகொள்ள முடிவதில்லை. சில கூட்டங்களில் ''யார் அந்த ராணி, உனக்கு தீராத வயிற்று வலி, சாக முடிவு எடுத்துக் கொண்டு இருக்கிறாய்'' என்று பிரசங்கியார் கூறுவதைக் கேட்டு இருக்கிறோம். இவைகளை தீர்க்க தரிசனம் என்று பலர் நினைத்துக் கொள்கிறார்கள். தீர்க்க தரிசனம் என்பது வருங்காலத்திற்கு உரிய காரியம், ஆனால் ஒரு மனிதனின் கடந்த கால அல்லது நிகழ்கால மறைவுகளை வெளிப்படுத்துவது ''ஞானத்தைப் போதிக்கும் வசனம்'' மற்றும் ''அறிவை உணர்த்தும் வசனம்'' ஆகிய வரங்களின் கிரியைகளே.

## 3. ஆவிகளைப் பகுத்து அறிதல்

நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் ஆவிகளை சோதித்து அறியுங்கள் என்று வேதம் சொல்லுகிறது.



மின்னுவது எல்லாம் பொன்னல்ல. வெளுத்தது எல்லாம் பாலுமல்ல என்ற பழமொழிக்கு ஏற்ப, பாடுவது எல்லாம், ஆடுவது எல்லாம் ஆவியல்ல என்பதை உணர்ந்து அதன் பிண்ணனி என்ன என்று அறிந்திடல் வேண்டும்.

இயேசு சிலுவைக்குப் போகுமுன்பு ''நீர் போகக் கூடாது'' என்று பேதுரு ''பாசமழை'' பொழிந்த போது ''அப்பாலே போ சாத்தானே'' என்று கடிந்து கொண்டதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

பேதுரு சொல்வது மேலோட்டமாக பாசமழைப்போல் தெரிந்தாலும் அதன் உள்ளோட்டம் தேவ சித்தத்தைத் தடுக்க சாத்தான் விரித்த நாசவலை என்று ஆண்டவர் பகுத்தறிந்த தினாலே அந்த ஆவியை அதட்டினார்.

அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பு பட்டணத்திற்கு வந்த போது ஒரு பெண் அடிக்கடி பின்னாக வந்து ''இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர் இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்'' என்று சொல்லி வந்தாள்.

எவ்வளவு உண்மையான சாட்சி, மகிமையான சாட்சி, நானாக இருந்தால் என்ன செய்து இருப்பேன் தெரியுமா. அந்தப் பெண்ணின் கூற்றை ஒளி, ஒலி நாடாவில் பதிவு செய்து இருப்பேன். அவளது படத்தை எனது புத்தகத்தில் போட்டு அற்புத சாட்சி என்று அவள் வாக்கு மூலத்தை எழுதி இருப்பேன் (ஒருவேளை).

ஆனால் பவுல் (அப் 16:17,18) என்ன செய்தார் தெரியுமா ''நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுவின் நாமத்தில் கட்டளையிடுகிறேன்'' என்று அந்த அசுத்த ஆவிக்கு கட்டளையிடுகிறார். அந்நேரமே அந்த அசுத்த ஆவி புறப்பட்டு போய் விட்டது.

பார்த்தீர்களா, புகழ்வார்த்தையை புன்சிரிப்போடு ஏற்றுக் கொள்ளாமல் அது என்ன ஆவி என்று பவுல் பகுத்து

அறிந்ததினால், அந்த ஆவியை அதட்டினார். பிலிப்பு பட்டணத்தில் பெரிய இரட்சிப்பு உண்டாயிற்று.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மூன்று விதமான ஆவியின் சக்திகள் செயல்படுகிறது. மனிதனுக்கு தேவன் ஆவியைக் கொடுத்திருக்கிறார். இந்த ஆவிக்குள் ஒரு மனிதன் சிந்தித்து செயல்படுகிறான். அது சுயசித்தம்.

இதே மனிதன் சில வேளைகளில் தேவ ஆவிக்கு உட்பட்டு செயல்படுகிறான். அப்போது அவன் ஆவி முழுவதுமாக தேவ ஆவியுடன் இசைந்து செயல்படுவதால் அவன் தேவ சித்தத்தை செய்கிறான்.

சிலர் சில வேளைகளிலும் பலர் பல வேளைகளிலும் சாத்தானின் ஆவிக்குட்பட்டு செயல்படுகின்றனர். இச்சமயங்களில் இவர்கள் ஆவி சாத்தானின் ஆவியோடு இசைந்து செயல்படுவதால் தேவ சித்தத்திற்கு எதிர்மாறாக அதாவது பிசாசின் சித்தத்தை நிறைவேற்றுகின்றனர்.

எனவே நமக்கு முன்பாக நிற்பவர்களுக்கு ஜெபிக்கும் முன்போ அல்லது பேசும்முன்போ அவர் எந்த ஆவியினால் ஆளப்பட்டு இருக்கிறார். எந்த ஆவியின் ஏவுதலினால் பேசுகிறார் என்பதை பகுத்து அறிதல் வேண்டும்.

சாத்தானின் ஆவி என்று பொதுவாக சொன்னாலும் அது விசேஷித்த தன்மையில் மனிதர்களை ஆட்கொண்டு அவர்களை ஒரு குறிப்பிட்ட செயலையே திரும்பத் திரும்ப செய்யத் தூண்டுகிறது. உலகில் பிசாசின் ஆவி கிரியை செய்யும் பல்வேறு விதங்களை வேதம் குறிப்பிடுவதை இங்கு வரிசைப்படுத்துகிறேன். கவனியுங்கள்.

1. பொல்லாத ஆவி (நியாயாதிபதி 9:23)
2. தாறுமாறுகளின் ஆவி (ஏசாயா 19:14)
3. கனநித்திரையயின் ஆவி (ஏசாயா 29:10)



4. ஊமைத்தன ஆவி (மாற்கு 9:17)
5. செவிட்டு ஆவி (மாற்கு 9:25)
6. பலவீனப்படுத்தும் ஆவி (லூக்கா 13:11)
7. வஞ்சிக்கிற ஆவி (I தீமோத்தேயு 1:7)
8. பயப்படுகிற ஆவி (II தீமோத்தேயு 1:7)
9. வேதசித்தன ஆவி (ஓசியா 5:4)
10. பொய்யின் ஆவி (I இரா 22:22)

இந்தச் சிறப்புத் தன்மை பெற்ற ஆவிகள் சிலரை ஆண்டுகொள்ளும் போது அவர்கள் வெளிப்பார்வைக்கு மிகவும் நல்ல முறையில் இருந்தாலும் ஒரு பக்கம் இந்தக் கிரியைகளை வெகுஜோராக செய்து கொண்டு இருப்பார்கள்.

ஊழியத்திலும், சபையிலும், சமுதாயத்திலும் நம்மை நெருங்கி வரும் மக்களின் உள்ளத்தை சரியாகக் கண்டு கொள்ள இந்த ஆவிகளைப் பகுத்தறியும் வரம் மிகவும் அவசியம்.

<u>இசைந்து கிரியை செய்யும் வரங்கள்</u>

நான் முன்னே எழுதியிருந்தபடியே ஒருவரம் கிரியை செய்யும்போது அதற்கு உதவியாக மற்றொரு வரம் கிரியை செய்கிறது. எனவே தேவன் ஒரு மனிதனை வரத்தினால் நிரப்ப சித்தம் கொள்ளும்போது அவர்களை தேவையான வரங்களினால் நிரப்புகிறார். சில வேளையில் சில குறிப்பிட்ட வரத்தை உடையவர் ஒரு பணியில் ஈடுபடும்போது அவருக்கு உதவக்கூடிய மற்றொரு வரம் உள்ள நபரை உடன் எழுப்புகிறார்.

உதாரணமாக அந்நியபாஷையில் ஒரு காரியத்தைக் குறித்து பேசும் நபருக்கு அதை மொழிபெயர்க்கும் வரம் இல்லையென்றால் அதை வியாக்கியானம் செய்யும் நபரை உடன் எழுப்புகிறார்.

தீர்க்கதரிசனத்தை ஒருவர் உரைக்கும் போது அதனால் தொடப்பட்டவரை சரியான பாதைக்கு நடத்த அறிவை உணர்த்தும் வசனமாகிய வரம் உதவி செய்கிறது.

குணமாக்கும் வரத்திற்கும், ஆவிகளைப் பகுத்தறியும் வரத்திற்கும் மிகுந்த தொடர்பு உண்டு.

நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும். வாய்நாடி வாய்ப்பச் செயல் என்ற குறளின்படி வியாதி யைக்கண்டு அதன் காரணத்தைக் கண்டுபிடித்து ஜெபிக்க வேண்டும்.

உதராணமாக ஒரு மருத்துவர் மருந்து கொடுக்கும் திறன்படைத்தவராக இருந்தாலும் அந்த நோய்க்குறிப்பை அவரல்ல, இரத்தப்பரிசோதனை நிலையத்திலேயே கண்டுபிடிக்கப்படுகிறது.

அது போலவே குணமாக்கும் வரம் பெற்றவர் தனக்கு முன்பாக உள்ள பிணியாளி எதனால் கட்டப்பட்டு இருக்கிறார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

உண்மையிலேயே உடல் வியாதிப்பட்டு இருக்கிறதா? அல்லது பிசாசின் கட்டுகளில் அகப்பட்டுள்ளாரா அல்லது கணவனிடம் கோபித்துக்கொண்டு அவரை பயமுறுத்த நடித்துக்கொண்டிருக்கிறாரா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். இங்கு குணமாக்கும் வரத்தை பயன்படுத்தும்முன்பு ஆவிகளைப் பகுத்தறிதல் வரம் மிக முக்கியமாக தேவைப்படுகிறது.

ஒரு வேடிக்கையான சம்பவம். ஒரு நாள் ராத்திரி ஒரு வாலிப பெண் மிகுந்த வேதனைப்படுவதாக அழைப்பு வந்தது. நான்கு ஊழியர்கள் குழுவாக அங்கு விரைந்தார்கள்.

அங்கு பரிதாபமான சூழ்நிலை, அந்தப் பெண் மயங்கி மயங்கி விழுகிறாள். நினைவு வந்தால் வாந்தி எடுக்கிறாள்.



ஒரு ஊழியர் பிசாசு பிடித்துக் கொண்டது என்று எண்ணி இயேசுவின் நாமத்தில் போ பிசாசே என்றார். பிசாசு போகவில்லை. அடுத்த நபர் வியாதியைக் கட்டி ஜெபித்தார், வாந்தி நிற்கவில்லை.

அதே வேளையில் அறிவை உணர்த்தும் வசனமும், ஆவிகளைப் பகுத்தறியும் வரமும் வேறு ஊழியரிடத்தில் கிரியை செய்தது. அவர் மெதுவாக அந்தப் பெண்கிட்டே வந்து அது அப்படித்தான் இருக்கும் பிறகு சரியாகிவிடும் என்றார்.

பெரியவர்களை நோக்கி இவள் கர்ப்பமாகி மூன்று மாதம், அப்படித்தான் இருக்கும் என்று வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார். விஷயம் வேறு ஒன்றும் அல்ல. அவள் மூன்று மாதத்திற்கு முன்பே இரகசியத் திருமணம் செய்து கொண்டு இருக்கிறாள்.

பிற்பாடு அவர்கள் ஒரு சமாதான ஜெபம் செய்துவிட்டு புறப்பட்டு விட்டார்கள். எனவே சரியாக வரத்தைப் பயன்படுத்த மற்ற வரம் உற்றத் துணையாக இருக்கிறது.

எனக்கன்பானவர்களே, தேவன் எவ்வளவு நல்லவர் பார்த்தீர்களா ! அவரைப் போல் நாம் இவ்வுலகில் கிரியை செய்ய ஆவியின் வரங்களை நமக்கு ஈவாகக் கொடுத்து உள்ளார்.

வரங்கள் இல்லாமல் ஆத்துமாக்களை ஆதாயம் செய்வது கூடாத காரியம். கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான் என்ற வார்த்தையின்படி கேளுங்கள். அவர் உங்களுக்கு நிறைவாகத் தருவார்.

# 6

# பரிசுத்த ஆவியை பெறுவது எப்படி?

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மிகவும் அவசியம் என்றும், அத்தோடு அந்நியபாஷை பேசுவது மிகுந்த ஆசீர்வாதம் என்றும், ஆவியின் வரங்கள் எத்துணை பிரயோஜனமானது என்றும் நீங்கள் கண்டு கொண்டீர்கள்.

இந்த ஆவியையும், அனுபவத்தையும் பெருவது எப்படி? பெற்றதில் வளர்வது எப்படி? என்ற ஆவல் உங்களில் பீறிட்டு எழும்பியிருக்கிறது என்பதை அறிவேன்.

எனவேதான் இந்த அதிகாரத்தை மிகுந்த ஆசையுடன் எழுதுகிறேன். ஆவியைப் பெறுவது எப்படி, அந்நியபாஷை பேசுவது எப்படி, வரங்களை அடைவது எப்படி போன்ற கேள்விகளுக்கு இந்த அதிகாரத்தில் செவ்வையான வழி முறைகள் உண்டு.

அதற்கு முன்பு சில ஐயப்பாடுகளை நீக்குவது எனது கடமை. நீச்சல் கற்றுக்கொள்ள குளத்துக்குப் போகுமுன்பே சிலர் ஐயோ அந்தக் குளம் மிக ஆழம் அதில் 10 பேர் செத்து விட்டார்கள். இப்போது வேண்டாம் என்று புலம்புவது போல பரிசுத்த ஆவியைக் குறித்தும் ஐயப்படுகிறார்கள்.



ஐயோ பரிசுத்த ஆவி கேட்கப் போய் வேறு ஏதாவது ஆவி வந்து பிடித்துக்கொண்டால் என்ன செய்வது, ஏதாவது ஏடா கூடமான பாஷை வந்துவிட்டால் என்ன செய்வது, நமக்கு ஏன் இந்த வம்பு, கர்த்தர் தரும் போது பெற்றுக்கொள்ளலாம் என்று தங்கள் வாய்ப்பை தள்ளி போட்டு விடுகிறார்கள்.

பரிசுத்த ஆவியைப் பொறுத்தவரை அது வலிய வந்து உங்கள் மேல் விழாது. கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான். தாகமுள்ளவன் மேல் தண்ணீரை ஊற்றுவேன் என்ற வசனத்தை நினைவுகூறுங்கள்.

இயேசுவின் நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டபோது தேவனுக்குப் பிள்ளைகளாகி விட்டீர்கள். வேத வசனத்தின்படி ஞானஸ்நானம் எடுத்தபோதே 'பிரியமான குமாரன்/குமாரத்தி' என்று ஆண்டவரிடத்தில் சாட்சி பெற்றுவிட்டீர்கள். பின்னே ஏன் நீங்கள் கலங்குறீர்கள்.

இயேசு சொன்னதைக் கவனித்துப் பாருங்கள். உங்களில் எவனாவது தன்னிடத்தில் மீனைக் கேட்கும் பிள்ளைக்கு பாம்பை கொடுப்பானா - மாட்டானே. அப்படியே உங்கள் பரமபிதா பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா.

இதன் பொருள் விளங்குகிறதா. மீனைக் கேட்டால் மீன்தான். பரிசுத்த ஆவியைக் கேட்டால் பரிசுத்த ஆவியைத்தான் பிதா தருவார். நிச்சயமாக அசுத்த ஆவி உங்களைப் பிடிக்காது - தொடாது - பயப்பட வேண்டாம்.

இங்கே ஒரு காரியத்தை உங்களுக்கு திறந்த மனதோடு சொல்ல விரும்புகிறேன். ''மாம்சமான யாவர் மீதும் என் ஆவியை ஊற்றுவேன்'' என்று தேவன் வாக்கு செய்து இருந்தாலும் தேவன் அப்படி பொதுவாக செய்வது இல்லை. தமது உன்னதமான ஆவியை ஊற்றுமுன் அந்த மனிதரை ஆராய்ந்துதான் அளிக்கிறார்.

1. கீழ்ப்படிகிறவர்களை அபிஷேகிக்கிறார் :

தேவன் தமது உன்னதமான ஆவியை தமக்கு கீழ்ப்படிகிறவர்கள் மூலம் ஊற்றுகிறார் என்று வேதம் கூறுகிறது. அப்போஸ்தலர் 5:32ல் ‘‘தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும்’’ என்று எழுதப்பட்டுள்ளதைக் கவனித்துப்பாருங்கள்.

முதலாவது வேத வசனத்திற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். கீழ்ப்படிய நமது உள்ளத்தில் தீர்மானம் எடுக்க வேண்டும். அப்படி செய்யும் போதே தேவன் நமக்காக கிரியை செய்ய ஆரம்பித்துவிடுவார்.

யோவான் ஸ்நானகன் இயேசு ஸ்நானம் பெற வந்தபோது தடுத்த போதிலும் ‘‘இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றது’’ என்று சொல்லி இயேசு ஸ்நானம் பெற்றார்.

அப்போது நடந்தது என்ன என்பதைப் பற்றி நீங்களே அறிவீர்கள். இயேசு, பிதாவின் பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்தார். அந்தக் கணமே பரிசுத்த ஆவியானவர் அவர் மேல் இறங்கினார்.

அப்போஸ்தலனாகிய பேதுரு தனது முதல் பிரசங்கத்திலேயே ‘‘நீங்கள் மனம் திரும்பி இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறுங்கள் அப்போது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றார். (அப் 2:38) இந்த வசனத்திற்கு கீழ்ப்படிந்தோர் அபிஷேகிக்கப் பட்டார்கள் என்பது அப்போஸ்தல நடபடிகள் சொல்லும் சாட்சி.

நான் ஏற்கனவே எழுதியதை நினைவு கூறுங்கள். நாம் வேத வசனத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் அல்லது கீழ்ப்படிய, இருதயத்தில் தீர்மானம் எடுக்க வேண்டும். (அப்போஸ்தலர் 10:44-48) வசனங்களில் ஒரு முக்கிய சம்பவத்தைக் காணலாம்



கொர்நேலியு வீட்டில் பேதுரு பிரசங்கித்துக் கொண்டிருக்கும் வேளையிலே பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கினார். அதைக் கண்ட பேதுரு பின்னர் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக் கட்டளையிட்டான்.

ஞானஸ்நானம் எடுத்தால் பரிசுத்த ஆவி கிடைக்கும் என்று அப் 2:38 இல் பிரசங்கித்த பேதுருவின் இந்தப் பிரசங்கத்தில், ஞானஸ்நானம் பெறாத நபர்கள் மீது பரிசுத்த ஆவி இறங்கியதன் இரகசியம் என்ன என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

கொர்நேலியு சாதாரணமான மனுஷன் அல்ல அவன் தேவனுக்குப் பயந்தவனும் கீழ்ப்படிகிற மனுஷனுமாக இருந்தான் என்று முந்தின அதிகாரங்களில் காண்கிறோம். வேத வசனத்தைக் கேட்டுக் கொண்டு இருக்கும்போதே அவர்கள் கீழ்ப்படிய இருதயத்தில் தீர்மானித்து விட்டார்கள் என்பது வேதத்தில் எழுதப்படாத உண்மை. இந்த தீர்மானத்தின் அடிப்படையில் கிருபையின் தேவன் அவர்களை அபிஷேகித்துவிட்டார்.

இப்படி கொர்நேலியு வீட்டில் மாத்திரம் அல்ல தேவன் சந்தித்தபோதே கீழ்ப்படிந்து ‘‘நான் என்ன செய்ய சித்தமாய் இருக்கிறீர்’’ என்று கேட்ட பவுலையும் முதலிலேயே அபிஷேகித்துவிட்டார்.

அப்போஸ்தலர் காலத்தில் மட்டும் அல்ல இன்றும் அப்படி செய்கிறார். அதற்கு எனது மனைவியின் அனுபவம் நல்ல எடுத்துக்காட்டு. அவர்கள் பக்தியும் பாரம்பரிய சபை வைராக்கியமும் உள்ள குடும்பத்தில் பிறந்து வளர்க்கப் பட்டவர். தனது வாலிப நாட்களில் மெய்யான சத்தியத்தை அறிந்துகொண்ட அவருக்கு மூழ்கி ஸ்நானம் பெற வேண்டும்மென்றும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற வேண்டும் என்றும் மிகுந்த வாஞ்சையுடன் இருந்தார்.

குடும்பத்தின் சூழ்நிலை அதற்கு ஏற்றார்போல் இல்லை. எனினும் ஞானஸ்நானத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்து

அதற்கான காலத்திற்காய் காத்துக்கொண்டே தனது வீட்டில் பரிசுத்த ஆவிக்காக ஆவலுடன் ஜெபித்து வந்தார். கொர்நேலியுவுக்கு பிரசங்க வேளையில் அபிஷேகம் செய்தவர் எனது மனைவிக்கு தனி ஜெபவேளையிலேயே அபிஷேகித்தார்.

நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் நாம் நமது உள்ளத்தில் வேத வசனத்திற்குக் கீழ்ப்படிய தீர்மானிக்கும் போதே தேவன் நம்மை அபிஷேகிக்கிறார் என்பதை உணர்த்தவே. ஒன்று நிச்சயம் உங்களுக்கு போதுமான வாய்ப்புகள் உண்டா - இல்லையா என்று தேவன் அறிவார் . எல்லா சுயாதீனமும் இருந்தும் வசனத்திற்குக் கீழ்ப்படியா விட்டால் தேவன் கண்டுகொள்வதில்லை. 'என் வசனத்திற்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்' என்று வேதம் கூறுகிறது.

2. காத்திருப்போர் மேல் ஆவியை ஊற்றுகிறார்

இயேசு ''பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்'' (அப் 1:5) என்று சீஷர்களைப் பார்த்து சொன்னது மிகவும் குறிப்பிடத்தக்கது. அப்போது பரிசுத்த ஆவியானவர் பூமிக்கு இறங்கிவரவில்லை. எனவே இயேசுவின் வார்த்தையின் படி அவர்கள் எருசலேமில் காத்து இருந்தார்கள். பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவர் முதல் முறையாக இறங்கி வந்தார்.

அப்போஸ்தலர்களைப் போல் நாம் இந்த நாட்களில் பரிசுத்த ஆவியானவரின் வருகைக்காக காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் பெந்தெகொஸ்தே நாளில் இறங்கின பரிசுத்த ஆவியானவர் அன்று முதல் இந்த பூமியில்தான் உள்ளார். சபையோடு இருந்து வருகிறார். இப் புத்தகத்தை வாசிக்கிற உங்கள் பக்கத்திலும் இருக்கிறார். எனவே அவர் உங்களை நிரப்பும்படி காத்திருக்க வேண்டியது அவசியம்.



அப்போஸ்தலர் காத்திருந்ததற்கும் இங்கே சொல்லப் பட்ட காத்திருக்குதலுக்கும் பெரிய வித்தியாசம் உண்டு. அவர்கள் பிதாவின் சமூகத்திலிருந்து இறங்கிவர காத்திருந் தார்கள். நாமோ நமக்கு வெளியிலிருக்கும் ஆவியானவரின் வல்லமை உள்ளத்துக்குள் வர காத்து இருக்கிறோம். அதாவது அவர் உள்ளே வந்து வாசம் பண்ணும்படி எதிர்பார்ப்போடு ஏங்கி நிற்கிறோம்.

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுபெலன் அடைந்து கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து உயரே எழும்புவார்கள், என்றும் கர்த்தருக்கு காத்திரு கர்த்தருக்கே காத்திரு என்றும் வேதம் எவ்வளவு அழகாக சொல்கிறது பாருங்கள்.

காத்திருக்குதல் என்பது மாதக் கணக்காக வருடக் கணக்காக இருக்க வேண்டும் என்று அர்த்தம் அல்ல. ஆவலோடு அவர் சமூகத்தில் இருத்தல் என்பதே அதன் அர்த்தம். நான் இரட்சிக்கப்பட்ட மறுவாரமே ஞானஸ்நானம் பெற்றேன். வேத வசனத்தைப் படித்த போதும் பிரசங்கங்கள் கேட்ட போதும் பரிசுத்த ஆவி எவ்வளவு அவசியமானது தேவையானது ஆசீர்வாதமானது என்று அறிந்து கொண்டேன்.

என் உள்ளம் இந்த ஆவியின் அபிஷேகத்திற்காய் ஏங்க ஆரம்பித்தது. 'மான்கள் நீரோடை வாஞ்சித்துக் கதறுவது போல' என்ற வேத வாக்கியத்தின் உச்சக்கட்ட நிலைக்கு என் ஆவல் எட்டி விட்டது. எதை நினைத்தாலும் - எதைப் பார்த்தாலும் பரிசுத்த ஆவியின் அபிஷேகமே நினைவுக்கு வந்தது.

நான் ஸ்நானம் பெற்ற 28வது நாள் சபையில் ஒரு உயிர்மீட்சி முகாம் வைத்திருந்தார்கள். தேவ சமுகத்தில் பெரிய உளவேட்கையோடு சென்றேன். அன்று அங்கு ஒரு அற்புதம் நடந்தது. ஜெபவேளையில் உன்னதமான ஆவியில் நிரப்பப்பட்டேன். பரலோக தேவன்பின் வெள்ளம் என்னை நிரப்பிற்று.

ஒருபக்கம் ஏதோ அருவி நீர் என்மேல் கொட்டுவது போன்ற உணர்வு. மற்றொரு பக்கம் நான் எங்கோ பறப்பது போன்ற உணர்வு. சொல்லொண்ணாத அனுபவம் அது. நான் ஆவியினால் நிரப்பப்பட்டேன்.

காத்திருப்பது என்பதின் அர்த்தம் உங்களுக்குப் புரிந்து இருக்கும் என்று நம்புகிறேன். நீங்கள் எவ்வளவு வாஞ்சை யோடு இந்த அநுபவத்தை எதிர்பார்க்கிறீர்கள் என்பதுதான் அதன் விளக்கம்.

அன்று அபிஷேகம் வேண்டும் என்று ஏங்கிய என்னை தேவன் கிருபையால் நிறைத்தார். அநேகருக்கு சத்தியத்தை சொல்லி, ஜெபித்து பரிசுத்த ஆவியை அவர்கள் பெற உதவி செய்து இருக்கிறேன். எங்கள் ஆராதனையிலும் எனது கூட்டங்களிலும் இன்றளவும் அநேகர் அபிஷேகம் பெற்று வருவது எத்தனை மகிழ்ச்சியானது தெரியுமா.

## அந்நியபாஷையில் பேசுவது எப்படி?

அநேகர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டாலும் அந்நியபாஷையில் பேச முடியாமல் தவிக்கிறார்கள். இதனால் ஆவியானவரின் தொடுகையை மட்டுப்படுத்தி இந்த அனுபவத்தை இழந்து விடுகிறார்கள்.

பரிசுத்த ஆவியானவர் உங்களை வல்லமையினால் நிரப்புவாரே தவிர உங்கள் நாக்கைப் பிடித்து வைத்துக் கொண்டு பேசமாட்டார். இது மிகப்பெரிய இரகசியம். செயலாற்றுவது மிகவும் எளிது.

வேத வசனங்களை சரியாய் கவனித்துப் பார்த்தால் உங்களின் பங்கு என்ன என்பதை தெளிவாக நீங்கள் அறிந்து கொள்ள முடியும். ‘‘விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன..... அவர்கள் நவமான பாஷைகள் பேசுவார்கள்’’ (மாற்கு 16:17).

இந்த வசனத்தின்படி பரிசுத்த ஆவியானவர் அல்ல விசுவாசிகள்தான் அந்நியபாஷையை பேசுவார்கள்.



‘‘பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்கு தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள்’’. (அப் 2:4)

ஆவியானவர் உங்களைத் தொடும்போது அந்நிய பாஷையில் பேசுவதில் உங்களுக்குத்தான் பெரும்பங்கு இருக்கிறது. நீங்கள் விசுவாசத்தால் கிரியை செய்ய வேண்டும்.

இயேசு செய்த அற்புதங்களை சிந்தித்துப் பாருங்கள். சூம்பின கையை உடைய மனுஷனைப் பார்த்து, கையை நீட்டு என்றார். அவன் நீட்டினான் அப்போது அவன் சொஸ்தமானான்.

திமிர்வாதக்காரனைப் பார்த்து எழுந்து நட என்றார் அவன் எழுந்தான் நடந்தான் சுகம் பெற்றான்.

இங்கு இவர்கள் சுகம் பெறும்முன் கையை நீட்டினார்கள் எழுந்தார்கள் தேவனின் வல்லமை இறங்கின அதே வேளையில் இவர்கள் விசுவாசத்தில் கிரியை நடப்பித்தார்கள்.

அயல்மொழி பேசுவதும் அப்படியே தேவன் உங்களை அபிஷேகிக்கும் போதே அந்நியபாஷை வரம் கொடுப்பார். நீங்கள் அவிசுவாசப்படாமல் பேசத்துவங்க வேண்டும்.

பேசுவது உங்கள் நாவாக இருக்கிறபடியால் ஆரம்பத்தில் சில பிரச்சினைகள் இருக்காலம். ஆவி பெற்ற ஊழியர்களோடு சேர்ந்து ஒருமனப்பட்டு ஜெபித்து அந்நியபாஷையில் பேசி தேவ கிருபையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

## ஆவிக்குரிய வரங்களைப் பெறுவது எப்படி :

அபிஷேகம் பெற்ற நீங்கள் அவருக்குள் முதலாவது கனிகொடுங்கள், அபிஷேகம் பெற்றவர்கள் முதலாவது தேவனுடைய அன்பை உலகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும்.

கலாத்தியரில் சொல்லப்பட்ட ஆவிக்குரிய கனிகள் முதலாவது உங்களிடத்தில் காணப்பட ஆசைப்படுங்கள்.

தேவனின் சித்தத்தை நிறைவேற்ற பூரணமாக ஒப்புக் கொள்ளுங்கள். அவர் வருகைக்கு முன்பாக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துங்கள். நீங்கள் அவருக்காக கிரியை செய்யும் போது உங்களுக்கு பிரயோஜனமான வரத்தை தேவன் உங்களுக்குக் கொடுப்பார்.

அப்போஸ்தலனாகிய பவுல் 'வரங்களை நாடுங்கள்' என்று எழுதியிருக்கிறார். எனவே வாஞ்சையுடன் கர்த்தரின் சமூகத்தில் வரங்களை குறிப்பிட்டு கேளுங்கள். உங்கள் வாஞ்சையின்படியே இந்தக் கடைசிக் காலத்தில் கர்த்தர் உங்களை ஆவிக்குரிய வரங்களினால் அலங்கரிப்பார்.

<u>முடிவாக</u>

எனது பிரிய தெய்வமக்களே உங்களுக்குத் தேவையான சத்தியங்களை திறந்த மனதோடு எழுதியிருக்கிறேன்.

ஆவியை அவித்துப் போடாதிருங்கள் ஆவியில் அனலாய் இருங்கள். பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசாதிருங்கள் என்று உங்களை அன்பாய் வேண்டிக் கொள்கிறேன்.

பல்வேறு உபதேசக் குழப்பங்கள் மலிந்து கிடக்கும் இந்தக் காலத்தில் ''எல்லாவற்றையும் சோதித்தறிந்து நலமானதைப் பற்றிக்கொள்ளுங்கள்'' என்று உங்களுக்குப் புத்தி சொல்கிறேன்.

வேத வசனத்தை ஆராய்ந்து பாருங்கள், அவைகளால் மாத்திரமே உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு, வேத வசனத்தில் இல்லாத சந்தேகங்களை தேவ சமூகத்தில் உபவாசித்து ஜெபித்துத் தீர்த்துக் கொள்ளுங்கள். கர்த்தர் சீக்கிரம் வருகிறார். ஆயத்தப்படுங்கள்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக !**



## எமது இதர வெளியீடுகள்

51. உத்தமனாகிய எஸ்றா
52. திருமறைக்கு ஓர் அறிமுகம்
53. போதகர் கையேடு
54. சிறுமைப்பட்டவளின் சிநேகிதி
55. உச்சிதமான பிரசங்க குறிப்புகள்
56. அப்போஸ்தலனாகிய அந்திரேயா
57. இயேசுவின் வருகையின் அடையாளங்கள்
58. யோனா தீர்க்கதரிசி
59. எடுத்துக் கொள்ளப்பட்ட ஏனாக்கு
60. பர்னபா
61. நான் கடந்து வந்த பாதை
62. பூர்வத்திலுள்ள ஸ்திரிகள்
63. பொற்குவியல்

## விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே!

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 9488856323

இப்படிக்கு
Pr. **அலெக்ஸ் தினகரன்**

WINNAGA APPAM
Building Lives with sound Doctrine